உ

திருவள்ளுவர்

அருளிச்செய்த

திருக்குறள்

மூலமும் குறிப்பும்

பதிப்பாசிரியர்

சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

வெளியிடுவோர் :

வாவிள்ள

இ[illegible]மி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்

[illegible]ஸ்பிளனேட், சென்னை

1927

[பிரபவஹூ ஆனிமீ

O-,1C5:5
N29
178383.

PRINTED AT
THE
SRI RAMA PRESS
MADRAS.

முகவுரை

திருக்குறள், தமிழ் மறை எனப் போற்றப்படும் ஒப்புயர்வற்ற நூல். இதனைத் தமிழ் மாதின் சூடாமணி என்னலாம்; இதனால் தமிழ்ப்பெருமையாண்டும் பரவிக்கொண்டே வருகிறது; இது பலமொழிகளிலும் பெயர்த்தெழுதப் பட்டும் அருமை பாராட்டப்பட்டும் வருகிறது; எல்லாத் திணையினர்க்கும் சமயத்தினர்க்கும் பொதுவாகத் திகழ்வதால் இதனைப்பொதுமறை என்றும் எடுத்திசைப்பர். இஃது இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரால் அருளிச் செய்யப்பட்டது.

திருவள்ளுவர் பிறப்பும் வளர்ப்பும் யாரானும் துணிந்துரைக்க இயலாதன; பலரும் பலபடப் பகர்வர். வள்ளுவர் என்ற பெயரைக் கொண்டு இவரை அக்குலத்தினர் என்பர் ஒரு சிலர். வள்ளுவராவார் அரசர் கருமத் தலைவர் என்பது நிகண்டு, இராமாயணம், சிலப்பதிகாரம் முதலியவற்றான் விளங்குதலின், இவரை இழிகுலத்தார் என்று கூறுதல் பொருந்தாது. வள்ளுவர் என்பது இயற்பெயரே எனக் கொள்வர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசியர். நாயனார், தேவர் என்னும் பெயர்கள் வள்ளுவனாருக்கு வழங்கி வருதலின் அவரை அரசகுலத்தினராகவும், வாசுகியார் என்னும் வேளாண் மாதை மணந்து கொண்டனர் என்று கேட்கப்படும் செய்தியினால், அவரை வேளாளர் என்றும் உரைப்பர்.

வள்ளுவர் மயிலாப்பூரிலே பிறந்து வளர்ந்தனரெனக் கபிலரகவலும் மதுரையைச் சார்ந்தவரெனத் திருவள்ளுவ மாலைச் செய்யுளொன்றும் புலப்படுத்தும். வள்ளுவர் என்னும் பெயர் மிகுதியும் சேர நாட்டிலே பயில வழங்குதலின் அவர் சேர நாட்டினராகலாம் என்றும் அறிஞர் ஊகிப்பர். கபிலரகவலேனும் திருவள்ளுவமாலையேனும் ஆதாரமாகக் கொள்ளக்கூடியவை அல்ல.

வள்ளுவர் சமயம் இன்னதென வெளிப்படையாக நூலினால் அறிதற் கருமையாக இருத்தலின் ஒவ்வொரு சமயத்தாரும் இவரைத் தந்தஞ் சமயத்தினர் என்பர்.

இவருடைய பாட்டுக்களையும் பொருளையும் அடிகளையும் பொன்னேபோற் போற்றி எடுத்தாளாத புலவர் ஒருவருமிலர் என்பது மிகையன்று. திருத்தக்க தேவர், கம்பர், சீத்தலைச் சாத்தனார், நக்கீரர் முதலான புலவர்கள் எல்லாரும் இவருடைய பாக்களை எடுத்தாண்டவர்களே. திருக்குறள் உலகப் பொருள் எல்லாவற்றையும் குறுகிய வடிவிலே கொண்டு திகழும் வனப்பை என்னென்று புகழலாம்?

'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்' என்னும் அவ்வையாரே அதனைச் சிறிதுரைக்க வல்லார்.

திருக்குறள் பாகலம் முற்றும் நிரம்பிப் பழந் தமிழ் மணம் பரிமளிப்பது; இலக்கிய பூஷணமாக இலங்குவது. இதன்கண் காணப்படும் வடநூற் கருத்துக்கள் சிலவற்றைக் கொண்டு சிலர் வடமொழிக்கண் தமக்குள்ள பற்றுள்ளம் பற்றியோ அறியாமையாலோ வள்ளுவர் பெருமையைக் குறைத்து வடமொழிப் பெருமையை உயர்த்துவர்.

நாயனர் தமது காலத்தே விளங்கியிருந்த, வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளினும் சிறந்திருந்த நூல்கள் எல்லாவற்றையும் நன்கு கற்றுப் புலமை நிரம்பி நின்ற பாவலர் பெருருமான் ஆதலானும், கற்ற அவற்றைப் பிறர் புலங்கொளக் கூறி முடிக்குந் திறல்படைத்த நன்னாவலர் ஆதலானும், பழைய நூலிலே கிடந்த அரும் பொருளை எடுத்துக் கூறுதலே அவர்க்குப் புகழென அவர் அறியாமை இரங்கற்பாலது. ஆயினும், அவற்றையன்றி இவர் தமது நுண்ணறிவாற் கண்டுரைத்த மெய்ப்பொருள்கள் எத்தனை ? அவரால் கண்டித் தொதுக்கப்பட்ட பழங் கொள்கைகள் வழக்கங்கள் எத்தனை? அவருடைய நாவேறிய பின் மணமேறிய கருத்துக்கள் எத்தனை ? இவர் வாயால் வெளிப்பட்ட பின் அழகு வெளிப்பட்டவை எத்தனை ? அவரால் இருள் நீங்கி ஒளியோங்கியவை எத்தனை ? இஃதன்றோ செந்நாப்புலமை பழுத்த நல்லிசைப் புலவர் உலகிற் களிப்பது. அவரன்றோ நமக்குக் கண்ணுவார்.

அருந்தமிழ்ச் செல்வமாகிய திருக்குறளை விட்டு வேறு நூல் ஓதுவோர் கரும்பிருக்க இரும்பு கடித்தெய்ப் போர்; அதனைக் கல்லாதவர் உலக நடை கல்லாதவர். இத் தெய்வத் திருக்குறளை அனைவரும் கைக்கருங்கலமாகக் கொண்டு பல்கானும் பயின்று, அதன் பொருளைப் பல் கானும் எண்ணி அதன் அழகை மனக்கண்ணுல் கண்டு, சுவையை நுகர்ந்து இன்புறுவார்களாக.

இங்ஙனம்,

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

D

திருக்குறள்

பால் இயல் அதிகார அகராதி

பால்.	பக்கம்.
அறத்துப்பால்	1
காமத்துப்பால்	109
பொருட்பால்	39

இயல்

அங்கவியல்	64
அரசியல்	39
இல்லறவியல்	5
ஒழிபியல்	96
களவியல்	109
கற்பியல்	116
துறவறவியல்	25

அதிகாரம்

அதிகாரம்	பக்கம்.
அடக்கமுடைமை	13
அமைச்சு	64
அரண்	75
அருளுடைமை	25
அலரறிவுறுத்தல்	115
அவர்வயின்விதும்பல்	127
அவர் அறுத்தல்	37
அவையஞ்சாமை	73
அவையறிதல்	72
அழுக்காறாமை	17
அறன்வலியுறுத்தல்	4
அறிவுடைமை	43
அன்புடைமை	8
ஆள்வினையுடைமை	62
இகல்	86
இடனறிதல்	50
இடுக்கணழியாமை	63
இரவச்சம்	107
இரவு	106
இல்வாழ்க்கை	5
இறைமாட்சி	39
இனியவைகூறல்	10
இன்னாசெய்யாமை	32
ஈகை	23
உட்பகை	89
உழவு	104
உறுப்புநலனழிதல்	124
ஊக்கமுடைமை	60
ஊடலுவகை	133
ஊழ்	38
ஒப்புரவறிதல்	22
ஒழுக்கமுடைமை	14
ஒற்றாடல்	59
கடவுள் வாழ்த்து	1
கண்ணோட்டம்	58
கண்விதுப்பழிதல்	118
கயமை	108
கல்லாமை	41
கல்வி	40

அதிகாரம்.	பக்கம்.
கள்ளாமை	29
கள்ளுண்ணாமை	93
கனவுநிலையுரைத்தல்	122
காதற்சிறப்புரைத்தல்	113
காலமறிதல்	49
குடிசெயல்வகை	103
குடிமை	96
குறிப்பறிதல்	71
குறிப்பறிதல்	110
குறிப்பறிவுறுத்தல்	128
குற்றங்கடிதல்	44
கூடாநட்பு	83
கூடாவொழுக்கம்	28
கேள்வி	42
கொடுங்கோன்மை	56
கொல்லாமை	33
சான்றாண்மை	99
சிற்றினஞ்சேராமை	46
சுற்றந்தழால்	53
சூது	94
செங்கோன்மை	55
செய்ந்நன்றியறிதல்	11
சொல்வன்மை	65
தகையணங்குறுத்தல்	109
தவம்	27
தனிப்படர்மிகுதி	120
தீநட்பு	82
தீவினையச்சம்	21
துறவு	35
தூது	69
தெறிந்து செயல்வகை	47
தெரிந்து தெளிதல்	51
தெரிந்துவினையாடல்	52
நடுவுநிலைமை	12
நட்பாராய்தல்	80
நட்பு	79
நலம்புனைந்துரைத்தல்	112
நல்குரவு	105
நன்றியில் செல்வம்	101
நாடு	74
நாணுடைமை	102
நாணுத்துறவுரைத்தல்	114
நிலையாமை	34
நிறையழிதல்	126
நினைந்தவர் புலம்பல்	121
நீத்தார் பெருமை	3
நெஞ்சொடுகிளத்தல்	125
நெஞ்சொடுபுலத்தல்	130
பகைத்திறந்தெரிதல்	88
பகைமாட்சி	87
பசப்புறுபருவரல்	119
படர் மெலிந்திரங்கல்	117
படைச்செருக்கு	78
படைமாட்சி	77
பண்புடைமை	100
பயனிலசொல்லாமை	20
பழமை	81
பிரிவாற்றாமை	116
பிறனில் விழையாமை	15
புகழ்	24
புணர்ச்சிமகிழ்தல்	111
புணர்ச்சிவிதும்பல்	129

அதிகாரம்.	பக்கம்.
புதல்வரைப் பெறுதல்	7
புலவி	131
புலவி நுணுக்கம்	132
புலான் மறுத்தல்	26
புல்லறிவாண்மை	85
புறங்கூறாமை	19
பெண்வழிச்சேறல்	91
பெரியாரைத்துணைக் கோடல்	45
பெரியாரைப் பிழையாமை	90
பெருமை	98
பேதைமை	84
பொச்சாவாமை	54
பொருள்செயல்வகை	76
பொழுதுகண்டிரங்கல்	123
பொறையுடைமை	16
மடியின்மை	61

அதிகாரம்.	பக்கம்.
மருந்து	95
மன்னரைச் சேர்ந்தொழுகல்	70
மானம்	97
மெய்யுணர்தல்	36
வரைவின்மகளிர்	92
வலியறிதல்	48
வாய்மை	30
வாழ்க்கைத்துணைநலம்	6
வான்சிறப்பு	2
விருந்தோம்பல்	9
வினைசெயல்வகை	68
வினைத்திட்பம்	67
வினைத்தூய்மை	66
வெகுளாமை	31
வெஃகாமை	18
வெருவந்தசெய்யாமை	57

உ

திருக்குறள் முதற்குறிப்பகராதி

செய்யுள்.	பக்கம்.
அகடாராரல்	94
அகப்பட்டி	108
அகரமுதல்	1
அகலாதணு	70
அகழ்வாரை	16
அகனமர்ந்து	9
அகனமர்ந்தீ	10
அஃகாமை	18
அஃகியகன்	18
அங்கணத்து	72
அசையியற்	110
அச்சமுடை	54
அச்சமேகீ	108
அஞ்சானமய	50
அஞ்சாமையீ	39
அஞ்சுமறியா	87
அஞ்சுவதஞ்	43
அஞ்சுவதோ	37
அடக்கமம்	13
அடல்வேண்டு	35
அடற்றகை	77
அடுக்கியகோ	96
அடுக்கிவரினு	63
அடுத்ததுகா	71
அணங்குகொ	109
அணியன்றோ	102
அந்தணரென்	3
அந்தணர்நூற்	55
அமரகத்தாற்	82
அமரகத்துவ	103
அமிழ்தினு	7
அமைந்தாங்	48
அரங்கின்றி	41
அரம்பொரு	89
அரம்போலு	100
அறிதரோதேற்	116
அரிதாற்றி	116
அரியகற்றாகற்	51
அரியவற்று	45
அரியவென்றா	54
அருங்கேட	21
அருஞ்செவ்	57
அருட்செல்	25
அருமறை	85
அருமையு	62
அரும்பய	22
அருவினையென்	49
அருளல்ல	26
அருளில்லார்	25
அருளென்	76
அருளொடு	76
அருள்கருதி	29
அருள்சேர்	25
அருள்வெஃகி	18
அலந்தாரை	131
அலரெழவாரு	115
அலர்நாண	115
அல்லலரு	25
அல்லவை	10
அல்லற்பட்	56
அவர்தந்தா	119
அவர்நெஞ்	130
அவாவில்	37
அவாவினை	37
அவாவென்ப	37
அவிசொரிந்	26
அவையறிந்	72
அவையறியார்	72
அவ்வித்தழுக்	17
அவ்வியநெ	17
அழக்கொண்	66
அழச்சொல்	80
அழல்போ	123
அழிவதூஉ	47
அழிவந்த	81
அழிவினவை	79
அழிவின்ற	77
அழுக்கற்ற	17
அழுக்காறவா	4
அழுக்காறுடை யார்	17
அழுக்காறுடை யான்	14
அழுக்காறென	17
அழுக்காற்றி	17
அளவல்லசெய்	29
அளவளாவில	53

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்	செய்யுள்.	பக்கம்.
அளவறிந்தார்	29	அறிவினுளெ	21	ஆகாறளவிட்	48
அளவறிந்து	48	அறிவின்மை	85	ஆகூழாற்	38
அளவின்கணி	29	அறிவுடையாரா	43	ஆக்கங்கருதி	47
அளித்தஞ்ச	116	அறிவுடையாரொ	43	ஆக்கமதர்வி	60
அறங்கூறுன	19	அறிவுருவா	69	ஆக்கமிழந்	60
அறஞ்சாரா	105	அறுவாய்நி	112	ஆக்கமுங்	65
அறஞ்சொல்	19	அறைபறை	108	ஆங்கமை	74
அறத்தாறிது	4	அற்காவியல்	34	ஆபயன்கு	56
அறத்தாற்றி	5	அற்றதறிந்து	95	ஆயுமறிவி	92
அறத்தான்	4	அற்றமறைக்கு	98	ஆய்ந்தாய்ந்	80
அறத்திற்கே	8	அற்றமறைத்த	85	ஆராவியற்கை	37
அறத்தினூஉங்	4	அற்றவரென்	37	ஆவிற்குநீரெ	107
அறம்பொரு	51	அற்றாரழிபசி	23	ஆள்வினையு	103
அறவாழிய	1	அற்றாரைத்தே	51	ஆற்றருமா	50
அறவினையா	33	அற்றார்க்கொன்	101	ஆற்றினளவறிந்தீ	48
அறவினை	91	அற்றாலளவறி	95	ஆற்றினவளறிந்து	73
அறனழீஇ	19	அற்றேமன்	63	ஆற்றின்வருந்	47
அறனறிந்தா	64	அனிச்சப்பூ	112	ஆற்றினிலைத	72
அறனறிந்துமூ	45	அனிச்சமு	112	ஆற்றினொழு	5
அறனறிந்துவெ	18	அன்பகத்தில்	8	ஆற்றுபவர்க்	75
அறனுக்கம்	17	அன்பரிவாரா	69	ஆற்றுவா—லிக	90
அறனியலா	15	அன்பறிவு	52	ஆற்றுவா—ல்பசி	23
அறனிழுக்கா	39	அன்பிலனு	87	ஆற்றுவா—ல்பணி	99
அறனீனு	76	அன்பிலாரெல்	8	இகலானு	86
அறனெனப்	5	அன்பிற்குமு	8	இகலிற்கெ	86
அறனோக்கி	19	அன்பின்வழி	8	இகலின்மி	86
அறன்கடை	15	அன்பின்விழை	92	இகலெதிர்	86
அறன்வரை	15	அன்பீனுமா	8	இகலென்ப	86
அறிகிலா	114	அன்புடை—லிவ்	100	இகலென்னு	86
அறிகொன்	64	அன்புடை—ல்வே	69	இகல்காணு	86
அறிதோறறி	111	அன்புநாணொ	99	இகழ்ச்சியிற்	54
அறிந்தாற்றி	52	அன்புமறனு	5	இகழ்ந்தெ	106
அறிவற்றங்	43	அன்புற்றமர்ந்த	8	இடமெல்லா	107
அறிவிலார்தாம்	85	அன்பொரீஇ	101	இடனில்பரு	22
அறிவிலானெ	85	அன்போடியை	8	இடிக்குந்து	45
அறிவினுளு	32	அன்றறிவாமெ	4	இடிபுரிந்தெள்	61

செய்யுள்.	பக்கம்.
இடிப்பாரை	45
இடுக்கட்ப	66
இடுக்கண்கா	103
இடுக்கண்வ	63
இடும்பைக்கி	63
இடும்பைக்கே	103
இடைதெரிந்	72
இணரூழ்த்து	65
இணரெரிதோ	31
இதனையிதனா	52
இமைப்பிற்கர	113
இமையாரின்	91
இம்மைப்பிறப்	132
இயல்பாகு	35
இயல்பினா	5
இயல்புளி	55
இயற்றலு	39
இரக்கவிர	106
இரத்தலினி	23
இரத்தலுமீ	106
இரந்துமுயி	107
இரப்பனிரப்	107
இரப்பாரை	106
இரப்பான்வெ	106
இரவாரிரப்	104
இரவுள்ளவுள்	107
இரவென்னு	107
இருணீங்கி	36
இருநோக்கி	110
இருந்துள்ளி	125
இருந்தோம்பி	9
இருபுனலும்	74
இருமனப்பெ	92
இருமைவகை	3
இருவேறுல	38
இருள்சேரிரு	1
இலக்கமுடம்	63
இலங்கிழா	127
இலமென்றசை	104
இலமென்றுவெ	18
இலர்பலராகிய	27
இலனென்றுதீய	21
இலனென்னு	23
இல்வாழ்வா	5
இல்லதெனி	6
இல்லாரை	76
இல்லாளையஞ்	91
இல்லாள்க	91
இல்லைதவற	133
இவறலுமாண்	44
இழத்தொறூஉ	94
இழிவறிந்துண்	95
இழுக்கலுடை	42
இழுக்காமை	54
இழைத்ததிக	78
இளித்தக்க	129
இளிவரின்	97
இளைதாகமு	88
இளையரின	70
இறந்தமைந்	90
இறந்தவெ	54
இறந்தாரிற	31
இறப்பேபுரி	98
இறலீனுமெ	18
இறுதிபய	69
இறைகடி	57
இறைகாக்	55
இற்பிற—கண்ண	96
இற்பிற—கண்ணே	105
இனத்தாற்	57
இனம்போன்	83
இனியவுள	10
இனியன்ன	130
இனைத்துணைத்	9
இனையரிவ	79
இன்கணுடை	116
இன்சொலாலீ	39
இன்சொலாலீர	10
இன்சொலி	10
இன்பங்க	117
இன்பத்து—பய	86
இன்பத்து—வி	63
இன்பமிடை	37
இன்பமொ	106
இன்பம்விழை-னி	63
இன்பம்விழை-ன்	62
இன்மையிடு	107
இன்மையினி-த	105
இன்மையினி-து	56
இன்மையு	16
இன்மையெ	105
இன்மையொ	99
இன்றியமை	97
இன்றும்வ	105
இன்னாசெ—ரை	32
இன்னாசெ—ர்	99
இன்னாதிரக்	23
இன்னாதின	116
இன்னாமை	63
இன்னாவெ	32
ஈட்டமிவ	101
ஈதலிசைப	24
ஈத்துவக்கு	23
ஈர்ங்கைவ	108
ஈவார்கணெ	106
ஈன்றபொ	7
ஈன்றாண்மு	93

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
ஈன்றாள்பசி	66	உவந்துறை	113	உறுபசியு	74
உடம்பாடி	89	உவப்பத்	40	உறுபொரு	76
உடம்பொ	113	உழந்துழந்	118	உறுப்பமைந்	77
உடுக்கையி	79	உழவினார்	104	உறுப்பொத்	100
உடுப்பதூஉ	108	உழுதுண்டு	104	உறுவதுசீர்	82
உடைசெல்	94	உழுவாரு	104	உறைசிறி	68
உடைத்தம்	48	உழைப்பிரி	53	உற்றநோய்நீ	45
உடைமையு	9	உளபோன்	58	உற்றநோய்நோ	27
உடையரெ	60	உளரெனினு	73	உற்றவன்	95
உடையார்	40	உளரென்னு	41	உற்றானளவு	95
உட்கப்படா	93	உளவரைது	48	ஊக்கமுடை	49
உட்பகைய	89	உள்ளக்களித்	129	ஊடலிற்றோ	133
உணர்வதி	72	உள்ளத்தார்	125	ஊடலிற்றோன்	133
உணலினு	133	உள்ளத்தாலு	29	ஊடலினுண்	131
உண்டார்க	109	உள்ளத்தாற்	30	ஊடலுணங்	131
உண்ணற்க	93	உள்ளமிலா	60	ஊடலுணர்தல்	111
உண்ணாது	16	உள்ளமுடை	60	ஊடற்கட்	129
உண்ணாமையு	26	உள்ளாம்போ	117	ஊடிப்பெ	133
உண்ணாமைவே	26	உள்ளற்க	80	ஊடியவ	131
உதவிவரைத்த	11	உள்ளியவெல்	31	ஊடியிருந்	132
உப்பமைந்	131	உள்ளியதெய்	54	ஊடுகமன்	133
உயர்வகலந்	75	உள்ளினு	121	ஊடுதல்	133
உயிருடம்பி	33	உள்ளினே	132	ஊணுடை	102
உயிர்ப்பவு	88	உள்ளுவதெல்	60	ஊதியமென்	80
உய்த்தல	129	உள்ளுவன்—னு	119	ஊரவர்கௌவை	115
உரமொரு	60	உள்ளுவன்—ம	113	ஊருணிநீர்	22
உரனசைஇ	127	உள்ளொற்றி	93	ஊழிபெய	99
உரனெனன்	3	உறங்குவ	34	ஊழிற்பெரு	38
உருவுகண்	67	உறன்முறை	89	ஊழையு	62
உரு[illegible]	94	உறாஅதவர்க்	130	ஊறொரா	67
உரைப்பா	24	உறாஅதவாம்போ	110	ஊனைக்கு	102
உலகத்தாரு	85	உறாஅ[illegible]கா	115	[illegible]	101
[illegible]	14	உறாஅர்க்கு	120	எட்பகவ	89
உலகந்தழீஇ	43	உறினட்ட	82	எண்சேர்ந்	91
உலைவிட	77	உறினுயிர	78	எண்ணித்து	47
உவக்காணெங்	119	உறுதோறு	111	எண்ணியவெ	67

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
எண்ணியா	50	எனைவகை	52	ஒழுக்கத்து	3
எண்ணென்ப	40	என்பிலதனை	8	ஒழுக்கமுடைமை	14
எண்பதத்தாலே	100	என்றுமோ	66	ஒழுக்கமுடைய	14
எண்பதத்தானோ	55	என்னைமுன்	78	ஒழுக்கமும்	96
எண்பொருள்	43	ஏதம்பெருஞ்	101	ஒழுக்கம்வி	14
எதிரதாக்கா	43	ஏதிலாரா	84	ஒழுக்காறு	17
எந்நன்றி	11	ஏதிலார்க்கு	19	ஒளியார்மு	72
எப்பொருளு	70	ஏதிலார்போ	110	ஒளியொருவ	98
எப்பொருளெ	36	ஏந்தியகொ	90	ஒறுத்தாரை	16
எப்பொருள்யார்	43	ஏமுற்றவ	88	ஒறுத்தார்க்	16
எய்தற்கரி	49	ஏரினுநன்	104	ஒறுத்தாற்	58
எரியாற்சு	90	ஏரினுழாஅ	2	ஒற்றினோனே	59
எல்லாப்பொ	75	ஏவவுஞ்சே	85	ஒற்றுமு	59
எல்லார்க்குந	13	ஐந்தவித்தா	3	ஒற்றொற்றி	59
எல்லார்க்குமே	59	ஐயத்தினீங்	36	ஒற்றொன்று	59
எல்லாவிளக்	30	ஐயப்படா	71	ஒன்றாகநல்	33
எல்லைக்கணி	81	ஐயுணர்வே	36	ஒன்றாமை	89
எவ்வதுறை	43	ஒட்டார்	97	ஒன்றாவுலக	24
எழுதுங்கா	129	ஒண்ணுதற்	109	ஒன்றானு	13
எழுபிறப்பு	7	ஒண்பொரு	76	ஒன்றெய்தி	94
எழுமையெ	11	ஒத்ததறிவா	22	ஒன்னார்த் .	27
எளிதென	15	ஒப்புரவினு	22	ஓஒதல்வே	66
எள்ளாத	47	ஒருதலையா	120	ஓதியுணர்ந்	84
எள்ளாமை	29	ஒருநாளே	127	ஓம்பினமை	116
எள்ளினிளி	130	ஒருபொழுது	34	ஓர்ந்துள்ள	36
எற்றிற்கு	108	ஒருமைக்க	40	ஓர்ந்துகண்	55
எற்றென்	66	ஒருமைச்	84	ஓஒவினிதே	118
எனைத்தானு	42	ஒருமைமக	98	கடலன்ன	114
எனைத்தானுமெ	32	ஒருமையுளா	13	கடலோடா	50
எனைத்திட்	67	ஒலித்தக்கா	77	கடனறிந்	69
எனைத்துங்	82	ஒல்லுங்கரு	82	க[illegible]னென்ப	99
எனைத்துணை	15	ஒல்லும்வகை	4	கடாக்களி	109
எனைத்துந	[illegible]	ஒல்[illegible]	68	க[illegible]அவரு	59
எனைத்தொ	121	ஒல்வதறிவ	48	கடிதோச்சு	[illegible]
எனைப்பகை	21	ஒழுக்கத்தினே	14	கடிந்தகடிந்	66
எனைமாட்சி	75	ஒழுக்கத்தினோ	14	கடுஞ்சொல்	57

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
கடுமொழியுங்	57	கலங்காதுக	67	காணுதாற்	85
கடைக்கொட்	67	கலர்ந்துணர்	125	காணிற்குவ	112
கணைகொடிதி	28	கல்லாதமே	85	காணுங்காற்	129
கண்களவு	110	கல்லாதவரிற்	73	காண்கமற்	127
கண்டதுமன்	115	கல்லாதவருந	41	காதலகாத	44
கண்டாங்கலு	118	கல்லாதானொ	41	காதலரில்	123
கண்டாருயிரு	109	கல்லாதான்	41	காதலர்தூ	122
கண்டுகேட்	111	கல்லார்ப்பி	57	காதலவரி	125
கண்ணிரைந்	128	கல்லாவொரு	41	காதன்மை	51
கண்ணிற்கணி	58	கல்லான்வெ	87	காமக்கடன்	117
கண்ணிற்றுணி	129	கவறுங்கழக	94	காமக்கடு—லு	114
கணணின்பச	124	கவ்வையாற்	115	காமக்கடுனீ	117
கணணின்றுக	19	கழாஅக்கால்	84	காமக்கணிச்	126
கண்ணுங்கொ	125	களவினலாகி	29	காமமுநாணு	117
கண்ணுடைய	40	களவின்கட்	29	காமமுழங்	114
கண்ணுள்ளார்	113	களவென்னு	29	காமமெனு	126
கண்ணுள்ளிற்	113	களித்தறியே	93	காமம்விடு	125
கண்ணொடுக	110	களித்தானை	93	காமம்வெகுளி	36
கண்ணோட்—த்	58	களித்தொரு	115	காலங்கருதி	49
கண்ணோட்—மி	58	கள்வார்க்கு	29	காலத்தினாற்	11
கண்ணோட்—மே	58	கள்ளுண்ணாப்	93	காலாழ்களரி	50
கதங்காத்துக்	13	கறுத்தின்னா	32	காலைக்குச்	123
கதுமெனத்தா	118	கற்கசடற	40	காலையருபி	123
கயலுண்கண்	122	கற்றதனலா	1	கானமுயலெ	78
காத்தலுமாற்	117	கற்றறிந்தார்	72	குடம்பை	34
காப்பவர்க்	107	கற்றாருட்கற்	73	குடிசெய்வ	103
காப்பிடும்பை	106	கற்றார்முற்	73	குடிசெய்வார்	103
காப்பிலாரெ	106	கற்றிலனாயினு	42	குடிதழீஇ	55
காப்பிலார்	106	கற்றீண்டு	36	குடிபுறங்காத்	55
காப்பினுங்	128	கற்றுக்கண்	69	குடிப்பிறந்தார்	96
காவாதுவந்	107	கனவினானுண்	122	குடிப்பிறந்—கு	51
கருமஞ்சிதை	58	கனவினுமி	82	குடிப்பிறந்—த	80
கருமஞ்செய	103	காக்கபொரு	13	குடிமடிந்து	61
கருமணியிற்	113	காக்கைகா	53	குடியாண்மை	61
கருமத்தானா	102	காட்சிக்கெ	39	குடியென்னுங்	61
கருவியுங்கா	64	காணாச்சின	87	குணநலஞ்	99

செய்யுள்.	பக்கம்.
குணநாடி	51
குணமென்னுங்	3
குணனிலனாய்	87
குணனுங்குடி	80
குலஞ்சுடுங்	102
குழலினிது	7
குறிக்கொண்	110
குறித்தது	71
குறிப்பறிந்து	70
குறிப்பிற்—ரா	71
குறிப்பிற்—ர்	71
குற்றமிலனாய்	103
குற்றமேகாக்	44
குன்றன்னார்	90
குன்றினனை	97
குன்றேறி	76
கூடியகாமம்	127
கூத்தாட்ட	34
கூழுங்குடியு	56
கூறாமைநோ	71
கூற்றங்குதி	27
கூற்றத்தை	90
கூற்றமோ	109
கூற்றுடன்	77
கெடல்வே	90
கெடாஅவழி	81
கெடுங்கா	80
கெடுப்பதூஉ	2
கெடுவல்யா	12
கெடுவாக	12
கெட்டார்க்	130
கேடறியா	74
கேடில்வி	40
கேடும்பெ	12
கேட்டார்ப்	65
கேட்டினு	80
கேட்பினுங்	42
கேளிழுக்கங்	81
கைம்மாறுவே	22
கையறியா	93
கைவேல்க	78
கொக்கொக்	49
கொடியார்—யி	117
கொடியார்—யு	124
கொடுத்தலு	53
கொடுத்து	87
கொடுப்பத	17
கொடுப்பதூஉ	101
கொடும்புரு	109
கொடைய	39
கொலைமே	56
கொலையிற்	55
கொலைவினை	33
கொல்லாந	99
கொல்லாமை	33
கொல்லான்	26
கொளப்பட்	70
கொளற்கரி	75
கொன்றன்	11
கோட்டுப்	132
கோளில்	1
சமன்செய்	12
சலத்தார்	66
சலம்பற்றி	96
சாதலினின்	23
சாயலுநா	119
சார்புணர்ந்	36
சால்பிற்குக்	99
சான்றவர்	99
சிதைவிடத்	60
சிறப்பறி	59
சிறப்பீ—மு	4
சிறப்பீ—ம்	32
சிறப்பொடு	2
சிறியாருணர்	98
சிறுகாப்பி	75
சிறுபடை	50
சிறுமைந	124
சிறுமைபல	94
சிறுமையுஞ்	77
சிறுமையுணீ	10
சிறைகாக்கு	6
சிறைநல	50
சிற்றினம	46
சிற்றின்ப	18
சினத்தைப்	31
சினமென்னு	31
சீரிடங்கா	83
சீரினுஞ்சீ	97
சீருடைச்செ	101
சீர்மைசிற	20
சுடச்சுட	27
சுவையொளி	3
சுழலுமிசை	78
சுழன்றுமேர்	104
சுற்றத்தாற்	53
சூழாமற்றா	103
சூழ்ச்சிமுடி	68
சூழ்வார்கண்	45
செப்பமுடை	12
செப்பின்பு	89
செயற்கரியசெ	3
செயற்கரியயா	79
செயற்கைய	64
செயற்பாலசெ	44
செயற்பாலதோ	64
செயிரிற்றலை	26
செய்கபொ	76

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
செய்தக்க	47	தகுதியென	12	தாம்வீழ்—த	120
செய்தேமஞ்	82	தக்காங்கு	57	தாம்வீழ்—மெ	111
செய்யாமற்செய்	11	தக்காரின	45	தாம்வேன்	115
செய்யாமற்செற்	32	தக்கார்தக	12	தார்தாங்கி	77
செய்வானே	52	தஞ்சந்தம	130	தாளாண்மையி	62
செய்வினை	68	தணந்தமை	124	தாளாண்தமயெ	62
செருக்குஞ்	44	தண்ணந்துறை	128	தாளாற்றி	22
செருவந்த	57	தந்தைமகற்	7	தானந்தவ	2
செல்லாமை	116	தந்நலம்	92	திறனல்ல	16
செல்லாவி	31	தந்நெஞ்சத்	121	திறனறிந்	65
செல்லான்	104	தமராகித்	53	தினற்பொரு	26
செல்லிடத்	31	தம்பொரு	7	தினைத்துணைந	11
செல்வத்துட்	42	தம்மிலிருந்	111	தினைத்துணையா	44
செல்விருந்	9	தம்மிற்பெரி	45	தினைத்துணையு	129
செவிகைப்ப	39	தம்மிற்றம்	7	தீப்பாலதான்	21
செவிக்குண	42	தலைப்பட்டார்	35	தீயவைசெய்	21
செவிச்சொல்	70	தலையினிழிந்	97	தீயவைதீய	21
செவியிற்சுவை	42	தவஞ்செய்	27	தீயளவன்றி	95
செவியுணவி	42	தவமறைந்	28	தீயினுற்சுட்ட	13
செறுச்சிறு	110	தவமுந்தவ	27	தீவினையார	21
செறிதொடி	128	தவறிலரா	133	துஞ்சினர்	93
செறிவறிந்	13	தள்ளாவிளை	74	துஞ்சுங்காற்	122
செறுநரை	49	தற்காத்துத்	6	துணைநலமா	66
செறுவார்க்	87	தனக்குவமை	1	துப்பார்க்க	2
செற்றவர்பி	126	தனியேயிருந்	130	துப்பினெவ	117
செற்றுரொன	125	தன்குற்றநீக்	44	துப்புரவில்	105
செற்றுர்பி	126	தன்றுணையின்	88	தும்முச்செறு	132
சென்றவிட	43	தன்னுயிர்க்கின்	32	துளியின்மை	56
சொலல்வல்	65	தன்னுயிர்தா	27	துறந்தா—த்	27
சொல்லுக—லி	20	தன்னுயிர்நீ	33	துறந்தா—ர்	5
சொல்லுக—லை	65	தன்னூன்பெரு	26	துறந்தார்படி	59
சொல்லுதல்	67	தன்னெஞ்சறி	30	துறந்தார்பெரு	3
சொல்லப்ப	108	தன்னைத்தான்-க்	31	துறந்தாரிற்	16
சொல்வண	83	தன்னைத்தான்-த	21	துறப்பார்	38
சொற்கோட்	12	தன்னையுணர்	132	துறைவன்	116
ஞாலங்கருதி	49	தாமின்புறு	40	துனியும்புல	131

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
துன்பத்திற்	130	நகையீகை	96	நனவினாற்	122
துன்பமுறவ	67	நகையுழுவ	31	நனவினானந்	122
துன்புறூஉ	10	நகையுள்ளு	100	நனவினானல்காக்	122
துன்னாத்து	125	நகைவகை	82	நனவினானல்காத	122
துன்னியார்	19	நசைஇயார்	120	நனவினானல்காரை	
தூங்காமை	39	நச்சப்படா	101		122
தூங்குக	68	நடுவின்றி	18	நனவென	122
தூய்மைது	69	நட்டார்குறை	91	நன்மையுந்	52
தூஇய்மையெ	37	நட்டார்க்கு	68	நன்றறிவா	108
தெண்ணீரடு	107	நட்டார்போ	83	நன்றாகுமாக்	33
தெய்வத்தா	62	நட்பிற்குவீ	79	நன்றாங்கா	38
தெய்வந்	6	நற்பிற்குறு	81	நன்றாற்ற	47
தெரிதலுந்	64	நண்பாற்றா	100	நன்றிக்கு	14
தெரிந்தவி	47	நத்தம்போற்	24	நன்றிமறப்	11
தெரிந்துண	118	நயந்தவர்க்	119	நன்றென்	72
தெருளாதா	25	நயந்தவர்நல்	124	நன்றேதரி	12
தெளிவிலத	47	நயனிலசொல்	20	நன்னீரைவா	112
தென்புலத்	5	நயனிலனெ	20	நாங்காதல்	120
தேரான்பிற	51	நயனீன்று	10	நாச்செற்று	34
தேரான்றெ	51	நயனுடை	22	நாடாதுந	80
தேவரனைய	108	நயனொடு	100	நாடென்ப	74
தேறற்க	51	நயன்சாரா	20	நாடொறுநாடி	56
தேறினும்	88	நலக்குரியார்	15	நாடோறுநாடு	52
தொகச்சொ	69	நலத்தகை	131	நாணகத்தி	102
தொடங்கற்	50	நலத்தின்க	96	நாணாமை	84
தொடலைக்	114	நலம்வேண்	96	நாணாலு	120
தொடிநோக்	128	நல்குரவே	105	நாணுமற	130
தொடிப்புழு	104	நல்லவை	38	நாணென	126
தொடியொடு	124	நல்லாண்	103	நாணென்	93
தொடிற்சுடி	116	நல்லார்கட்	41	நாணொடு	114
தொட்டனைத்	40	நல்லாறென	33	நாண்வேலி	102
தொல்வர	105	நல்லாறெனி	23	நாநல	65
தொழுதகை	83	நல்லாற்றா	25	நாளென.	34
தோன்றிற்	24	நல்லினத்தி	46	நிணந்தீயி	126
நகல்வல்லர	100	நவிறொறு	75	நிலத்தியல்	46
நகுதற்பொரு	79	நற்பொரு	105	நிலத்திற்	96

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
நில்வரைநீ	24	நோதலவன்	131	பயன்றூக்கி	92
நிலைமக்கள்	77	நோயெல்லா	32	பரிந்தவர்நல்	125
நிலையஞ்சி	33	நோய்நாடி	95	பரிந்தோம்பிக்	14
நிலையிற்றி	13	நோவற்க	88	பரிந்தோம்பிப்	9
நில்லாதவ	34	நோனாவுடம்	114	பரியதுகூர்	60
நிழனீருமின்	89	பகச்சொல்	19	பரியினுமா	38
நிறைநீர	79	பகல்கருதி	86	பருகுவார்	82
நிறைநெஞ்	92	பகல்வெல்	49	பருவத்தோ	49
நிறைமொழி	3	பகுத்துண்	33	பருவரலும்	120
நிறையரி	114	பகைநட்பாக்	88	பலகுடைநீ	104
நிறையுடைமை	16	பகைநட்பாங்	83	பலசொல்ல	65
நிறையுடையே	126	பகைபாவ	15	பலநல்லகற்	83
நினைத்திருந்	132	பகைமையு	71	பல்குழுவு	74
நினைத்தொ	121	பகையகத்துச்	73	பல்லவைக	73
நினைப்பவர்	125	பகையகத்துப்	73	பல்லார்ப—க	45
நீங்கான்வெகு	87	பகையென்	88	பல்லார்முனி	2
நீங்கிற்றெ	111	பசக்கமற்	119	பழகியசெல்	94
நீரின்றமை	2	பசந்தாளி	119	பழகியநட்	81
நீருழல	131	பசப்பென	119	பழிமலைந்	66
நுணங்கிய	42	படலாற்று	118	பழியஞ்சி	5
நுண்ணியநூ	38	படியுடை	61	பழுதெண்	64
நுண்ணியமெ	71	படுபயன்	18	பழைமையெ	81
நுண்மாணு	41	படைகுடி	39	பழையமெ	70
நுனிக்கொம்	48	படைகொண்	26	பற்றற்றகண்	53
நூலாருணூல்	69	பணியுமாமெ	98	பற்றற்றகண்ணே	35
நெஞ்சத்தார்	113	பணிவுடைய	10	பற்றற்றே	28
நெஞ்சிற்றுற	28	பணைநீங்கிப்	124	பற்றிவிடாஅ	35
நெடுங்கட	2	பண்டறியே	109	பற்றுகபற்	35
நெடுநீர்மற	61	பண்ணென்	58	பற்றுள்ள	44
நெடும்புன	50	பண்பிலான்	100	பனியரும்பி	123
நெய்யாலே	115	பண்புடை	100	பன்மாயக்கள்	126
நெருப்பினு	105	பதிமருண்டு	123	பாடுபெறு	124
நெருநலுள	34	பயனிலபல்	20	பாத்தூண்	23
நெருநற்றுக்	128	பயனில்சொற்	20	பாலொடு	113
நோக்கினா—கி	110	பயன்மரமுள்	22	பிணிக்குமருந்	111
நோக்கினா—கி	109	பயன்றூக்கார்	11	பிணியின்மை	74

செய்யுள்.	பக்கம்.
பிணையேர்	109
பிரித்தலும	64
பிரிவுரைக்	116
பிழைத்துணர்	42
பிறப்பென்னு	36
பிறப்பொக்	8
பிறர்க்கின்	32
பிறர்நாணத்	102
பிறர்பழியு	102
பிறவிப்பெ	1
பிறன்பழி	19
பிறன்பொரு	15
பிறன்மனை	15
பீலிபெய்	48
புகழின்றாற்	97
புகழ்ந்தவை	54
புகழ்பட	24
புகழ்புரிந்	6
புக்கிலமை	34
புணர்ச்சிபழ	79
புத்தேளுல	22
புரந்தார்கண்	78
புலத்தலிற்	133
புலப்பலென	126
புலப்பேன்	127
புலவையுட்	72
புல்லாதிராஅ	131
புல்லிக்கிடந்	119
புல்லிவிடாஅ	133
புறங்குன்றி	28
புறங்கூறிப்	19
புறத்துறுப்	8
புறந்தூய்	30
புன்கண்ணை	123
பெண்ணிய	132

செய்யுள்	பக்கம்.
பெண்ணிற்	6
பெண்ணினாற்	128
பெண்ணேவல்	91
பெயக்கண்டு	58
பெயலாற்றா	118
பெரிதாற்றி	128
பெரிதினிது	84
பெரியாரை	90
பெருக்கத்து	97
பெருங்கொ	53
பெருமைக்கு	51
பெருமைபெ	98
பெருமையு	98
பெரும்பொரு	74
பெறாஅமையஞ்	130
பெறினென்	127
பெறுமவற்	7
பெற்றார்	6
பேணாதுபெட்டா	118
பேணாதுபெட்ப	129
பேணாதுபெண்	91
பேதைபெருங்	82
பேதைப்ப	38
பேதைமையு	84
பேதைமையெ	84
பேதைமையொ	81
பேராண்மை	78
பொச்சாப்பார்	54
பொற்சாப்புக்	54
பொதுநலத்	92
பொதுநோக்	53
பொய்படுமோ	84
பொய்ம்மையு	30
பொய்யாமைபொ	30
பொய்யாமைய	30
பொருடீர்ந்	20

செய்யுள்.	பக்கம்.
பொருட்பெண்டிர்	92
பொருட்பொரு	92
பொருணீங்	25
பொருண்மா	123
பொருள்கரு	63
பொருள்கெடு	94
பொருளல்லவரை	76
பொருளல்லவற்	36
பொருளற்றார்	25
பொருளாட்சி	26
பொருளானா	101
பொருளென்	76
பொருளென	49
பொறியின்	62
பொறிவாயி	1
பொறுத்தலிற	16
பொறையொ	74
போற்றினரி	70
மகன்றந்தை	7
மக்கண்மெய்	7
மக்களேபோல்	108
மங்கலமென்ப	6
மடலூர்தல்	114
மடிமடிக்	61
மடிமைகுடி	61
மடியிலா	61
மடியுளா	62
மடியைமடியா	61
மடுத்தவா	63
மணிநீருமண்	75
மணியிற்றிக	128
மண்ணோடியை	58
மதிநுட்ப	64
மதியுமடந்தை	112
மயிர்நீப்பின்	97
மருந்தாகித்	22

செய்யுள்.	பக்கம்.
மருந்தென	95
மருந்தோமற்	97
மருவுகமாசற்	80
மலரன்ன-ண்மு	112
மலரன்ன—ளரு	115
மலரினுமெல்	129
மலர்காணின்	112
மலர்மிசை	1
மழித்தலுநீ	28
மறத்தல்வெ	31
மறந்தும்பி	21
மறப்பினு	14
மறப்பினெவ	121
மறமானமா	77
மறவற்கமா	11
மறைந்தவை	59
மறைபெற	118
மறைப்பேன்மற்	126
மறைப்பேன்மன்	117
மற்றியானெ	121
மற்றுந்தொடர்	35
மனத்ததுமா	28
மனத்தானா	46
மனத்தினமை	83
மனத்துக்கண்	4
மனத்துளது	46
மனத்தொடு	30
மனநலத்தி	46
மனநலநன்கு	46
மனநலமன்	46
மனந்தூயார்	46
மனந்தூய்	46
மனமாணாவு	89
மனைத்தக்க	6
மனைமாட்சி	6
மனையாளை	91
மனைவிழைவா	91
மன்னர்க்கு	56
மன்னர்விழை	70
மன்னுயிரெல்	117
மன்னுயிரோ	20
மாதர்முகம்	112
மாலைநோய்	123
மாலையோவல்	123
மாறுபாடில்	95
மிகச்செய்	83
மிகன்மேவன்	86
மிகினுங்குறை	95
மிகுதியான்	16
முகத்தான	10
முகத்தினினி	83
முகத்தின்மு	71
முகநகநட்ப	79
முகநோக்கி	71
முகைமொக்	128
முடிவுமிடை	68
முதலிலார்க்	45
முயக்கிடை	124
முயங்கிய	124
முயற்சிதிரு	62
முரண்சேர்ந்	50
முறிமேனி	112
முறைகோடி	56
முறைசெய்	39
முறைப்பட	64
முற்றாற்றி	75
முற்றியுமுற்	75
முனைமுகத்	75
முன்னுறக்கா	54
மேலிருந்து	98
மேற்பிறந்தா	41
மையலொரு	84
மோப்பக்கு	9
யாகாவாரா	13
யாங்கண்ணி	114
யாண்டுச்செ	90
யாதனின்யா	35
யாதானுநா	40
யாமுமுளோ	112
யாமெய்யா	30
யாரினுங்கா	132
யானெனதெ	35
யானோக்கு	110
வகுத்தான்	38
வகைமாண்	90
வகையறச்	47
வகையறிந்துத	88
வகையறிந்துவ	73
வசையிலாவ	24
வசையென்ப	24
வசையொழிய	24
வஞ்சமனத்தா	28
வருகமற்கொ	127
வருமுன்னர்	44
வருவித்து	9
வரைவிலாமா	92
வலியார்க்கு	87
வலியார்முற்	25
வலியினிலை	28
வழங்குவ	96
வழிநோக்	87
வழுத்தினா	132
வறியார்க்	23
வன்கண்கு	64
வாணிகஞ்செய்	12
வாய்மையெ	30
வாராக்காற்	118
வாரிபெருக்	52

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
வாழ்தலுயிர்	113	விழுப்பேற்	17	வீறெய்தி	67
வாழ்வார்க்	120	விழைதகை	81	வெண்மை	85
வாளற்றுப்	127	விழையார்	81	வெருவந்த	57
வாளொடென்	73	விளக்கற்ற	119	வெள்ளத்தனையம்	60
வாள்போல்	89	விளிந்தாரின்	15	வெள்ளத்தனையவி	63
வானின்றுல	2	விளியுமெனி	121	வேட்ட	111
வானுயர்தோ	28	வினைகலந்து	127	வேட்பத்தா	65
வானோக்கி	55	வினைக்கண்		வேட்பன	70
விசும்பிற்று	2	வினைகெ	62	வேண்டற்—ஃ	18
விடாஅது	121	வினைக்கண்வினையு	52	வேண்டற்—ன்	94
விடுமாற்று	69	வினைக்குரி	52	வேண்டா	37
விண்ணின்று	2	வினைசெய்	59	வேண்டிய	27
வித்துமிடல்	9	வினைத்தி	67	வேண்டினு	35
வியவற்க	44	வினைபகை	68	வேண்டுங்	37
விருந்துபுற	9	வினையான்	68	வேண்டுதல்	1
விருப்பறுச்	53	வினைவலி	48	வேலன்று	55
விரைந்து	65	வீழப்படு	120	வேலொடு	56
விலங்கொடு	41	வீழுநர்வீ	120	வைத்தான்	101
வில்லேருழ	88	வீழு மிருவர்	111	வையத்துள்	5
விழித்தகண்	78	வீழ்நாள்	4		
விழுப்புண்ப	78	வீழ்வாரினி	120		

திருக்குறள்

மூலமும் குறிப்பும்

உ

அறத்துப்பால்

பாயிரவியல்

---

1 கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனால்ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ? 2

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குஉவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 7

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

---

2. வாலறிவன் - மெய்யுணர் வினையுடையவன். 3. மாணடி - மாட்சிமைப்பட்ட அடி. 4. வேண்டுதல் - விழைதல், வேண்டாமை- வெறுத்தல். 5. இருவினை - நல்வினை, தீவினை.

2 வான் சிறப்பு

வான்நின்று உலகம் வழங்கி வருதலாற்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. 1

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 2

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின்று உடற்றும் பசி. 3

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 4

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 5

விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. 6

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 7

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 8

தானந் தவம்இரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 9

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. 10

---

1. வான் - மழை. நின்று – இடையறாது. தான் அமிழ்தம் - அம்மழையே அமிர்தம். 2. துப்பு - உணவு. துப்பார் - உண்பவர். 3. விண் - மழை. உடற்றுதல் - வருத்துதல். 4. புயல்-மழை. வாரி - வருவாய். 5. சார்வாய்-துணையாய். எடுப்பது-உதவுவது. 6. விசும்பு-மேகம். 7. நீர்மை- இயல்பு. தடிதல்-குறைதல். நல்கல் - ஈதல். 8. வறம் – நீரின்மை. 9. தங்கா - நடைபெறா. 10. ஒழுக்கு- நீர் ஒழுக்கு.

3 நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. 1

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 2

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. 3

உரன்என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரன்என்னும் வைப்புக்கோர் வித்து. 4

ஐந்தவித்தான் ஆற்றல் ஆகல்விசும்புளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. 5

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 6

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு. 7

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 8

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது. 9

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 10

---

1. விழுப்பம்-சிறப்பு. பனுவல் - நூல். 2. துணை - அளவு. 3. இருமை - இம்மை, மறுமை. பிறங்குதல்-உயர்தல். 4. உரன் - திண்மை. தோட்டி - கதவு. 5. ஐந்து - மெய், வாய் கண், மூக்கு- செவி. 6. செய்கலார் - செய்யமாட்டாதார். 7. வகை - கூறுபாடு. கட்டே - கண்ணதே. 8. நிறை - அறிவுடைமை. மறை. அறிவுநூல். 9. குணம் - நற்குணங்கள். வெகுளி - கோபம். கணம்- இமைப்போது. 10. அறவோர் - துறவிகள். செந்தண்மை-கருணை,

4 அறன்வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ வுயிர்க்கு. 1

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை யதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 2

ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல். 3

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 4

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். 5

அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 6

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. 7

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 8

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. 9

செயற்பால தோரும் அறனே யொருவற்கு
உயற்பால தோரும் பழி. 10

---

1. சிறப்பு - வீட்டுப்பேறு. ஊங்கு - சிறந்தது. 2. மறத்தல் - கைவிடுதல். 3. ஒல்லுதல் - இயலுதல். ஓவுதல்-ஒழிதல். 4. மாசு- குற்றம். ஆகுலம் - ஆரவாரம். 6. பொன்றுதல் – அழிதல். 7. ஆறு-பயன். 8. வீழ்நாள் - வீணாக்கழியும் நாட்கள். வாழ்நாள் - பிறந்துழலும் நாட்கள்.

இல்லறவியல்

---

5 இல்வாழ்க்கை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை. 1

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 2

தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. 3

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 4

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 5

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்? 6

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை. 7

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து. 8

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. 9

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். 10

---

1. இயல்பு - அறவியல்பு. மூவர் - பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி. நல்லாறு - நல்லொழுக்கம். 2. துவ்வாதவர் - தரித்திரர். 3. தென்புலத்தார் - பிதிரர். ஒக்கல் - சுற்றத்தார்.

6 வாழ்க்கைத் துணை நலம்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைக் துணை. 1

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 2

இல்லதுஎன் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை. 3

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின் ? 4

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 5

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 6

சிறைகாக்குங் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 7

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 8

புகழ்புரிந்த இல்இலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 9

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 10

---

1. மனை - மனையறம். மாண்பு - நற்குணம். வளம் - வருவாய். 2. மனைமாட்சி - இல்லறத்திற்குத்தக்க நற்குணங்கள். 4. திண்மை- உறுதி. 5. கொழுநன் - கணவன். 6. பேணுதல் - காப்பாற்றுதல். 7. நிறை - கற்பு. 8. புத்தேளிர் - வானோர். 9. இல் - மனையாள் ஏறு - ஆண்சிங்கம். 10. மங்கலம் - அழகு. நன்கலம் - சிறந்த ஆபரணம்.

7 புதல்வரைப் பெறுதல்

பெறும்அவற்றுள் யாம்அறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. 1

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 2

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும். 3

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 4

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு. 5

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். 6

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 7

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 8

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 9

மகன்தந்தைக் காற்றும் உதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். 10

---

1. அறிவது - மதிப்பது. 2. பிறங்கல் - ஒளிர்தல். 4. ஆற்ற - மிக. அளாவிய – பிசைந்த. 5. மெய் - தேகம். 6. குழல் - புல்லாங்குழல். யாழ் - வீணை. மழலை- குதலை. 7. ஆற்றுதல் - செய்தல். அவை– சபை. 8. அறிவு- கல்வியறிவு. 9. ஈனுதல் - பெறுதல். சான்றோன் - அறிவுடையோன். 10. நோற்றல் தவஞ் - செய்தல்.

8 அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 1

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 2

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. 3

அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 4

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. 5

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 6

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 7

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பார்க்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 8

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. 9

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 10

---

1. தாழ் – கதவு. ஆர்வலர் - அன்புடையார். பூசல்தரும்– தூற்றும். 2. உரியர் - உதவுவர். 3. ஆருயிர் – அரியவுயிர். ஈனும் - அருளும். நாடாச்சிறப்பு - அளவிறந்த சிறப்பு. 5. எய்துதல் - அடைதல். 6 மறம் - பாவம். 7. வெயில் - இரவி. 8. வன்பார்- வன்னிலம். புறத்துறுப்பு-இடம், பொருள், ஏவலாளர். அகத்துறுப்ப - மனம். 10. உயிர்நிலை - உயிர்பெற்ற உடம்பு.

9. விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 1

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று. 2

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 3

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 4

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 5

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 6

இனைத்துணைத்து என்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 7

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 8

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 9

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 10

---

1. ஓம்புதல் - பேணுதல். 2. புறத்து-வீட்டின்புறம். 3. வைகலும் - நாடோறும். 4. செய்யாள் - திருமகள். 5. மிச்சில் - மிகுந்தது. மிசைதல் - அயிறல். 6. வானத்தவர்-தேவர். 7. இனைத்துணை - இவ்வளவு. 8. வேள்வி- ஐவகை வேள்வி. 9. மடவார்- அறிவிலாதார். 10. மோப்பம் - வாசனை. திரிதல் -வேறுபடுதல்.

10 இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 1

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின். 2

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொலினதே அறம். 3

துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் அவர்க்கு. 4

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 5

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 6

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 7

சிறுமையுள் நீங்கிய இன்சொன் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். 8

இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது? 9

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 10

---

1. ஈரம் - அன்பு. அளைதல் - கலத்தல். படிறு - பாவம். 2. அகன்அமர்தல் - நெஞ்சுவத்தல். 4. உறுதல் – அடைதல். துவ்வாமை - நல்குரவு. 5. அணி - அழகு. 6. நல்லவை - நன்மை பயப்பவை. 7. நயன் - நீதி. 8. சிறுமை - துன்பம். 10. கவர்தல் - இச்சித்தல்.

11 செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 1

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 2

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 3

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 4

உதவி வரைத்தன்று உதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 5

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 6

எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 7

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 8

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 9

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 10

---

1. வையகம் - மண்ணுலகம். வானகம் -விண்ணுலகம். 3. தூக்கார் - கருதாதவர். 4. துணை - அளவு 5. வரைதல் - அளவிடுதல். 6. கேண்மை - நட்பு. துப்பு - பற்றுக்கோடு. 7. எழுமை - எழுபிறப்பு. விழுமம் - துன்பம். 9. அன்னது - ஒப்பது. 10. கொன்றார் - சிதைத்தவர்.

12 நடுவு நிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட்டு ஒழுகப் பெறின் 1

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப் புடைத்து. 2

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடேல். 3

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். 4

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி. 5

கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். 6

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 7

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கு அணி. 8

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 9

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின். 10

---

1. தகுதி - நடுவுநிலைமை. பகுதி - பகை, நொதுமல், நண்பு என்னும் முப்பகுதி. 2. செப்பம் - நடுவுநிலைமை. 3. இகத்தல் - கடத்தல். 4. தக்கார் - நடுவுநிலைமையுடையவர். 5. கோடுதல் - ஒருதலைக்கணிற்றல். 6. ஒருவுதல்-ஒழித்தல். 7. கெடுமை - வறுமை. நன்றி - அறம். 8. சமன் - சமம். சீர்தூக்கல் - வரையறுத்தல். 9. கோட்டம் - கோடுதல். உட்கோட்டம் - மனத்தின் கண் கோடுதல். 10. வாணிகம் - வியாபாரம்.

13 அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 1

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 2

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். 3

நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 4

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 5

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. 6

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 7

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 8

தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 9

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 10

---

1. அமரர் - தேவர் ஆரிருள் - பாவமாகிய இருள். 2. காத்தல் - கைக்கொள்ளுதல். 3. ஆறு - நீதிநெறி. செறிவு - மிகுதி. 4. திரிதல் - வேறுபடுதல். 5. பணிதல் - அடங்குதல். தகைத்து - தகுதியுடையது. 6 ஒருமை - ஒருபிறப்பு. 7. யா-யாதொன்று. சோகாப்பர் - துன்பப்படுவர். 8. நன்று - பிறவறங்களானுண்டான நன்மை. 9. உள் - மனத்தின்கண். 10 கதம் — கோபம்.

14 ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. 2

ஒழுக்கமுடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 3

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 4

அழுக்கா றுஉடையான்கண் ஆக்கம்போன் றுஇல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. 5

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 6

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 7

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 8

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 9

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார். 10

---

1. விழுப்பம் - சிறப்பு. 2. தேர்தல் - தெளிதல். 3. குடிமை - வருணம். 4. ஒத்து வேதம். 6. ஒல்கல்-சுருங்குதல். 7. இழுக்கம் – இழிவு. 9. ஒல்லுல் - இயலுதல், வழுக்குதல்-மறத்தல்.

15 பிறனில் விழையாமை

அறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 1

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல். 2

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்தொழுகு வார். 3

எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறன் இல் புகல். 4

எளிதென இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 5

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். 6

அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 7

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு. 8

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார். 9

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 10

---

1. பெட்டல் - விரும்பல். 2. அறன்கடை - பாவம். 3. விளிந்தார் - இறந்தவர். 4. இல் - இல்லாள். 5. இல்லிறப்பான்-பிறன் இல்லின்கண் நிற்பவன். விளிதல் - அழிதல். 6. இகல்- நீங்குதல். 7. நயத்தல் - விரும்புதல். 8. ஆன்ற - சிறந்த. 9. நாமநீர்- கடல்நீர். 10. அறன்வரையான்-அறநெறிஒழுகாதவன். அல்ல - பாவங்கள்.

16 பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 1

பொறுத்தல் இறப்பினை யென்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 2

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 3

நிறையுடைமை நீங்காமை வேண்டில் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும். 4

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 5

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 6

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. 7

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். 8

துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 9

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின். 10

---

1. அகழ்தல் - அடைதல். 2. இறப்பு - குற்றம். 3. இன்மை - வறுமை. வன்மை - நன்மை. 4. நிறை - செல்வம் 5. ஒறுத்தல் - நீக்குதல். 6. பொன்றுந்துணை - உலகம் அழியும்வரை. 7. திறன் - நன்மை. 8. மிகுதி - செருக்கு. தகுதி - பொறை. 9. நோற்கிற்றல் - பொறுத்தல். 10. இன்னாச் சொல் - தீச்சொல்.

17 அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு. 1

விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 2

அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான். 3

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 4

அழுக்கா றுடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 5

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 6

அவ்வித்து அழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 7

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 8

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். 9

அழுக்கற்று அகன்றாரும் இல்லையஃ தில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். 10

---

1. ஒழுக்காறு - ஒழுக்கநெறி. 2. விழுப்பேறு - சீரியபேறு. 3. அழுக்கறுத்தல் - அழுக்காறுசெய்தல். 4. படுபாக்கு - வருதல். 7. அவ்வித்தல் - பொறாமை கொள்ளுதல். தவ்வை - மூதேவி. 8. செறுத்தல் - கோபித்தல். தீயுழி - நரகம். 10. தீர்தல் - நீங்குதல்.

18 வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 1

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 2

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 3

இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 4

அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 5

அருள் வெஃகி யாற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 6

வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன். 7

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 8

அறனறிந்து வெஃகார் அறிவுடையார்ச் சேருந்
திறனறிந்து ஆங்கே திரு. 9

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. 10

---

1. வெஃகுதல் - விரும்புதல். 2. பொன்றுதல் - கெடுதல். 4. இலம் - வறுமை. புலம் - ஐம்புலன்கள். 5. அஃகுதல் - சுருங்குதல். 9. திரு - திருமகள். 10. இறல் - இறுதி. எண்ணல் - பின் விளைவதறிதல்.

19 புறங்கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 1

அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை. 2

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். 3

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 4

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 5

பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும். 6

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 7

துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. 8

அறன்நோக்கி யாற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. 9

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. 10

---

1. கூறல் - சொல்லுதல். 2. அழீஇ-அழித்து. 3. புறங்கூறல் - ஒருவரைக்காணாதவழி இகழ்ந்துரைத்தல். 4. கண் - எதிர்; கண்ணோட்டம். 5. புன்மை - அறிவின்மை. 7. பகச்சொல்லல் - புறங்கூறல். 8. துன்னியார் - தன்னொடு பழகினவர்.

20 பயனிலசொல்லாமை

பல்லார் முனியப் பயனில்ல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 1

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது. 2

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித்து உரைக்கும் உரை. 3

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து. 4

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 5

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 6

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 7

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். 8

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். 9

சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல். 10

---

1. பல்லார் - பலர். முனியல் - முயலுதல். எள்ளுதல் - இகழ்தல். 2. நயன் - விருப்பம். 3. பாரித்தல் - விரித்தல். 4. சீர்மை - விழுப்பம். 9. தீர்தல் - நீங்குதல்.

21 தீவினையச்சம்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. 1

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 2

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். 3

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. 4

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 5

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். 6

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். 7

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று. 8

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். 9

அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். 10

---

1. தீவினையர் - தீயொழுக்கமுடையவர். விழுமியர் - நல்லொழுக்க முடையவர். 2. பயத்தல் - விளைத்தல். 5. பெயர்த்து-மீண்டு. 6. தீப்பால - தீவினைகள். நோய்ப்பால் - துன்பஞ் செய்பவைகள். 7. எனை - எத்துணை. 8. வீதல் - விடுதல்.

22 ஒப்புரவறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ வுலகு. 1

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு.
வேளாண்மை செய்தற் பொருட்டு. 2

புத்தேள் உலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவின் அல்ல பிற. 3

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 4

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு. 5

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கண் படின். 6

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 7

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர். 8

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யாது அமைகலா வாறு. 9

ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து. 10

---

1. கைம்மாறு-உதவி. 2. தாளாற்றல்-முயலல். 4. ஒத்தது-உலகநடை. 5. நயன் – ஒம்புரவு. 7. தப்புதல் - பிழைபடுதல். 8. கடன்-கடமை. 9. அமைகல் - வருந்துதல். 10. கோளல்-கொள்ளுதல்.

23 ஈகை

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து. 1

நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 2

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள. 3

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணு மளவு. 4

ஆற்றுவார்க்கு ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின். 5

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 6

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. 7

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் அவர். 8

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 9

சாதலின் இன்னாதது இல்லை யினிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை. 10

---

1. குறியெதிர்ப்பு-அளவு குறித்து வாங்கியவாறே எதிர் கொடுப்பது. 2. மேலுலகம் - விண்ணுலகம் 3. எவ்வம் - இகழ்ச்சி. 5. ஆற்றுவார்-தவஞ் செய்பவர். 6. ஆற்றார்-வறியர். 7. மருவுதல்-பழகுதல். 8. ஈத்துவத்தல்-கொடுத்துவத்தல்.

24 புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை யுயிர்க்கு. 1

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 2

ஒன்றா வுலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். 3

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 4

நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 5

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 6

புகழ்பட வாழாதார் தந்நோவர் தம்மை
இகழ்வாரை நோவ தெவன். 7

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 8

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 9

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 10

---

1. இசைபடுதல்-புகழுண்டாதல். 3. ஒன்றுதல்-ஒப்பாதல். 4. நீளல்-நிலைபெற்றல். 5. நத்தம்-ஆக்கம். 6. தோன்றல்-பிறத்தல். 7. நோதல்-வருந்துதல். 8. எச்சம்-அழிவில்லாப்பொருள் 9. வசை-குற்றம்.

துறவறவியல்

---

25 அருளுடைமை

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. 1

நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. 2

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல். 3

மன்னுயி ரோம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 4

அல்லல் அருளாள்வார்க் கில்லை வழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி. 5

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 6

அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொரு ளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு. 7

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது. 8

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 9

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. 10

---

1. பூரியார் - இழிந்தவர். 2. பல்லாறு – எந் நெறிகளும். 3. புகல்-பிறத்தல். 4. அருளாள்வார்-அருளுடையவர். 5. வளி-காற்று. கரி - சான்று. 6. பொச்சாப்பு - மறதி. 8. பூத்தல்-பொலிதல். 9. தேர்தல்-ஆராய்தல்.

26 புலான்மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 1

பொருளாட்சி போற்றாதார்க்கில்லை அருளாட்சி
ஆங்கில்லை யூன்தின் பவர்க்கு. 2

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை யுண்டார் மனம். 3

அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல். 4

உண்ணாமை யுள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. 5

தினற்பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும்
விலைபொருட்டால் ஊன்தருவா ரில். 6

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின். 7

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 8

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று. 9

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும். 10

---

1. ஊன் - உடம்பு. 2. ஆங்கு - அவ்வாறு. 3. படை-கொலைக் கருவி. 4. கோறல் - கொல்லுதல். 5. அளறு - நரகம். 8. செயிர்-குற்றம். 9. செகுத்தல் - போக்குதல்.

27 தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. 1

தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது. 2

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை அவர்கள் தவம். 3

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 4

வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 5

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. 6

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 7

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். 8

கூற்றம் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 9

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 10

---

1. நோன்றல் - பொறுத்தல். 2. அவம் - வீண். 3. துப்புறவு-அனுபவிக்கப்படுவன. 4. தெறுதல் - அழித்தல். 5. ஈண்டு-இம்மைக்கண். 7. சுடர் - ஒளி. 8. அற - உரித்தாக. 10. நோலாதார் - தவஞ் செய்யாதவர்.

28 கூடாவொழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 1

வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். 2

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 3

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. 4

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவுந் தரும். 5

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 6

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கின் கரியா ருடைத்து. 7

மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 8

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். 9

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். 10

---

1. பூதம்-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். 2. தோற்றம்-தவவேடம். 3. வல்லுருவம்-பொய்யுருவம். 4. புள்-பறவை. சிமிழ்த்தல்-பிணித்தல். 5. எற்று-என்னே. 6. வன்கண்-கொடுமை. 7. கரியார்-கருத்த நெஞ்சமுடையவர். 9. கணை-அம்பு. யாழ்-வீணை. 10. மழித்தல்-மொட்டையடித்தல்.

29 கள்ளாமை

எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. 1

உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். 2

களவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 3

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். 4

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 5

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 6

களவென்னுங் கார்அறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். 7

அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. 8

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 9

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. 10

---

1. எனைத்தொன்றும் - யாதொன்றும். 2. உள்ளம்-மனம் 3. களவு - திருடு. 4. கன்றுதல் - மிகுதல். 6. அளவு - அறநெறி 7. கார் - இருள். 8. கரவு - வஞ்சனை. 10. தள்ளுதல் - தவறுதல்.

30 நீத்தார் வாய்மை

வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 2

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 4

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
எல்லா அறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் அல்ல பிற. 10

---

1. வாய்மை – மெய்மை. 2. புரை - குற்றம். 3. பொய்த்தல் - பொய்சொல்லுதல். 5. தலை - சிறப்பு. 6. எய்த்தல் - வருந்துதல். 10. பிற - பிறவறங்கள்.

31 வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். 1

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற. 2

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்தல் அதனான் வரும். 3

நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற. 4

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். 5

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 6

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 7

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

உள்ளிய எல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 9

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 10

---

1. வெகுளல் - கோபித்தல். 2. அல்லிடம்-தன்சினம்பலியாத விடம். 3. பிறத்தல்-விளைவித்தல். 4. உவகை-உற்சாகம். 6. சேர்ந்தாரைக்கொல்லி - நெருப்பு. 7. பொருள் - குணம். 8. இணரெரி - நெருப்பு. புணர்தல் - கூடுதல். 10. இறந்தார் - கோபிப்பவர்.

32 இன்னா செய்யாமை

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் அறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 3

இன்னா செய்தாரை பொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 4

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. 5

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 6

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 7

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 8

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

நோயெல்லா நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 10

---

1. சிறப்பு - மோக்ஷம். செல்வம்-அணிமா முதலிய எண்வகை சித்திகள். 2. கறுத்தல் - கோபித்தல். 3. உய்த்தல் - அனுபவித்தல். 4. ஒறுத்தல் - நீக்குதல். 5. போற்றல் - காத்தல். 7. எனைத்து - எவ்வகை. 9. முற்பகல் - முற்கூறு. 10. நோய் - இன்னா.

33 கொல்லாமை

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். 1

பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற் றுள்எல்லாந் தலை. 2

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 3

நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி. 4

நிலையஞ்சி நீத்தாருள் எல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 5

கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லாது உயிருண்ணுங் கூற்று. 6

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 7

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங் கடை. 8

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 9

உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 10

---

1. பிறவினை-பாவச்செய்கைகள். 2. பகுத்தல்-தான் ஈட்டிய பொருளில் கொடுத்தல். 3. ஒன்றாதல் - தன்னோடிணைத்தல். 5. நிலை-பிறப்பின்வகை. சூழ்தல்-ஆகக்கொள்ளுதல். 6. கூற்று-நமன். 7. வினை-தொழில். 8. கொன்றாகும் ஆக்கம் - கொன்றதனால் வரும்பாவம். 9. மாக்கள்-மாந்தர்.

34 நிலையாமை

நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 1

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 2

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 3

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின். 4

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 5

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் உலகு. 6

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 7

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு. 8

உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 9

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 10

---

1. புல்லறிவு - சிற்றறிவு. 2. கூத்தாட்டு - கூத்தாடுதல். விளித்தல் - கெடுதல், சாதல். 3. அற்கல் - நிலைபெறுதல். இயல்பிற்று - இயல்புடையது. 4. ஈர்த்தல் - அறுத்தல். வாளது-வாளை யொத்தது. 5. செற்றல்-அடக்குதல். 6. நெருநல்-நேற்று. 7. கருதல்-நினைத்தல். 8. குடம்பை-முட்டை. 10. துச்சில்-தங்குமிடம்

ஞானவியல்

35 துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 1

வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல. 2

அடல்வேண்டும் ஐந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 3

இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 4

மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். 6

பற்றி விடா இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 7

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை அவர். 8

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 9

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 10

---

1. நோதல் - துன்பமடைதல். 2. வேண்டின். உண்டாக-காலம்பெற. இயற்பால - அனுபவிக்கத்தக்கவை. 3. அடல்-கெடுத்தல். விடல் - துறத்தல். 4. மயல் - மயக்கும் மாயை. 5. உற்றார்-மேற்கொண்டவர். 6. புகுதல்-எய்துதல். 7. இடும்பை-பிறவித்துன்பம். 9. பற்று - ஆசை.

36 மெய்யுணர்தல்

பொருளல் லவற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணாப் பிறப்பு. 1

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி அவர்க்கு. 2

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையகத்தின்
வானம் நணியது உடைத்து. 3

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. 4

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 5

கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி. 6

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 7

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. 8

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய். 9

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்
நாமங் கெடக்கெடும் நோய். 10

---

1. மருள் - விபரீத உணர்வு. 2. இருள் - மாயை. மாசறு காட்சி - மெய்யுணர்வு. நண்ணல் - கிட்டுதல். 4. ஐயுணர்வு - ஐம்புலன்களாலுண்டாகிய உணர்வு. 5. அறிவு - மெய்யுணர்வு. 6. தலைப்படுதல் - எய்துதல். 9. சார்பு - மாயை.

37 அவாவறுத்தல்

அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 1

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 2

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில். 3

தூஉய்மை யென்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 4

அற்றவ ரென்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர். 5

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. 6

அவாவினை ஆற்ற அறுப்பிற் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும். 7

அவாவில்லார்க்கு இல்லாகுந் துன்பம் அஃதுண்டேற்
தவாஅது மேன்மேல் வரும். 8

இன்ப மிடையறாது ஈண்டும் அவாவென்னுந்
துன்பத்துட் துன்பங் கெடின். 9

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 10

---

1. தவல் - கெடுதல். 2. வேண்டாமை - அவாவின்மை. 3. ஆண்டு - துறக்கத்தின்கண். 4. வாய்மை - உண்மை. 5. அற்றவர் - அவாவறுத்தவர். 6. ஓரும்; அசைநிலை. 8. தவா - மூவகைத் துன்பங்கள். 10. ஆர்தல் - நிரம்புதல்.

38 ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 1

பேதைப் படுக்கும் இழவூழ் அழிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 2

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். 3

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு. 4

நல்லவை எல்லாஅந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. 5

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 6

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது. 7

துறப்பார்மற் றுப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 8

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவது எவன். 9

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 10

---

1. ஊழ் - வினை. 4. இருவேறு-இரண்டுகூறு. திருவேறு-செல்வமுடையாராதலும் வேறு. தெள்ளியர் - அறிவுடையார். 5- செயல் - ஆக்குதல். 6. பால் - ஊழ். பரிதல் - வருந்திக் காத்தல். சொரிதல் - நீக்குதல். 7. வகுத்தான் - தெய்வம் 8. துப்புரவு – செல்வம். 9. ஆங்கால் - விளையுங்கால்.

பொருட்பால்

அரசியல்

39 இறைமாட்சி

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 1

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 2

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. 3

அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடையது அரசு. 4

இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. 5

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 6

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் உலகு. 7

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். 8

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 9

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தற்கு ஒளி. 10

---

1. கூழ் - பொருள். 2. எஞ்சாமை - இடைவிடாது நிற்றல். 4. இழுக்காதிருத்தல் - வழுவாதிருத்தல். 5. இயற்றல் - ஆக்கல். 6 மீக்கூறல்-உயர்த்திக்கூறல். 7. ஈத்தல்-கொடுத்தல். 8. இறை-கடவுள். 9. கவிகை-குடை.

40 கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 1

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 2

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 3

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 4

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். 5

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. 6

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத ஆறு. 7

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. 8

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 9

கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை அவை. 10

---

1. கசடு – பழுது. 2. எண்-கணக்கு. 5. உடையார்-செல்வமுடையார். 6. தொடுதல் - தோண்டுதல். ஊறல் - சுரத்தல். 8. ஒருமை - ஒருபிறப்பு. ஏமாப்பு - உதவி. 9. காமுறுதல் - விரும்புதல். 10. மாடு - செல்வம்.

41 கல்லாமை

அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 1

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 2

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 3

கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளார் அறிவுடை யார். 4

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 5

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். 6

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று. 7

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 8

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றார் அனைத்திலர் பாடு. 9

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை அவர். 10

---

1. வட்டாடல் - உண்டையுருட்டல் 3. நனி - மிகவும். 4. ஒட்பம் - அறிவுடைமை. 5. சொல்லாடல் - உரையாடல். 6. களர் - சேற்றுநிலம். 7. புலம் - அறிவு. 9. திரு - செல்வம். 9. மேல்பிறந்தார் - உயர்ந்த சாதியிற்பிறந்தவர்.

42 கேள்வி

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்
செல்வத்துள் எல்லாந் தலை. 1

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 2

செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரொடு ஒப்பர் நிலத்து. 3

கற்றிலன் ஆயினுங் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை. 4

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். 5

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 6

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி அவர். 7

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 8

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது. 9

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென். 10

---

1. செவிக்குணவு - செவிக்குக்கேள்வி. 3. அவியுணவு - வேள்வித்தீயிற்கொடுக்கும்உணவு. 4. ஒற்கம்-தளர்ச்சி. 5. இழுக்கல் - வழுக்குதல். 6. ஆன்ற - நிறைந்த. 7. பேதைமை-இழிவு. 8. தொட்டல் - தோண்டுதல். 9. வணங்கியவாயினர் - பணிந்த மொழியினை யுடையவர்.

43 அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். 1

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. 2

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 3

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. 4

உலகந் தழீஇயது ஒட்பம் மலர்தலுங்
கூம்பலும் இல்ல தறிவு. 5

எவ்வது உறைவது உலகம் உலகத்தொடு
அவ்வது உறைவ தறிவு. 6

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 7

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை யஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 8

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 9

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 10

---

1. அற்றம்-இறுதி. 2. ஒருவுதல்-ஆராய்தல். 5. தழுவுதல்-விரும்புதல். 6. உறைதல் - ஒழுகுதல். 7. அறிகல்லாதவர் - அறியமாட்டாதவர். 8. அஞ்சுவது-அஞ்சப்படுவது. 9. எதிரது-வரக்கடவது.

44 குற்றங்கடிதல்

செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 1

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 2

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 3

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை. 4

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 5

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. 6

செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 7

பற்றுள்ள மென்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 8

வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 9

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 10

---

1. செருக்கு-கர்வம். பெருக்கம்-செல்வம். 2. இவறன்மை-உலோபத்தன்மை. 3. நாணல் - அஞ்சுதல். 5. வைத்தூறு-வைக்கோற்குவை. 7. உயற்பாலக - உளதாம்தன்மை. 9. வியத்தல் - நன்கு மதித்தல். நயத்தல் - விரும்புதல். 10. உய்க்கல். அனுபவித்தல்.

45 பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்தஅறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 1

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 2

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 3

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை. 4

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 5

தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 6

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். 7

இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 8

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. 9

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 10

---

1. மூத்த - சிறந்த. 2. உறுதல் - அடைதல். பேணுதல் - காப்பாற்றுதல். 3. தமர் - சிறந்தவர். 4. வன்மை - செல்வம். 5. ஒழுகல் - நடத்தல். 6. தக்கார்- தகுதியுடையவர். செற்றார் - பகைவர். 7. இடித்தல் - இடித்துரைத்தல். 8. ஏமரல் - கலங்குதல். 9. மதலையாதல் - தாங்குதல்.

46 சிற்றினஞ்சேராமை

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 1

நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. 2

மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல். 3

மனத்துள் அதுபோலக் காட்டி யொருவற்கு
இனத்துள தாகும் அறிவு. 4

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். 5

மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை. 6

மனநல மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். 7

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து. 8

மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து. 9

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில். 10

---

2. திரிதல் - மாறுதல். இனம் - குலம். 3. இன்னான் - இத்தன்மையன். 6. எச்சம் - மக்கள். 10. துணை - உதவி.

47 தெரிந்து செயல்வகை

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல். 1

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்று மில். 2

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார். 3

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர். 4

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. 5

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். 9

எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு. 7

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 8

நன்றாற்றல் உள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை. 9

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு. 10

---

1. பயத்தல் - கொடுத்தல். ஊதியம் - பயன். 2. எண்ணல்- ஆராய்தல். 3. ஊக்கல் – மேற்கொள்ளுதல். 4. இளிவு - அருவருப்பு. 5. எழுதல் - செல்லுதல். பாத்திப்படுத்தல் - நிலைபெறச் செய்தல். 7. இழுக்கு - குற்றம். 8. வருந்தல் - முயலுதல். 9. பண்பு - குணம். 10. எள்ளுதல் - இகழ்தல்.

48 வலியறிதல்

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 1

ஒல்வது அறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில். 2

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 3

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 4

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 5

நுனிக்கொம்பர் ஏறினான் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 6

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 7

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை. 8

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 9

உளவரை தூக்காத வொப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும். 10

---

1. மாற்றான் - அயலான். 2. ஒல்லல்-இயலல். 3. ஊக்குதல் - தொடங்குதல். 5. பீலி - மயிற்றோகை. சாகாடு - வண்டி. இறுதல் - முறிதல். 10. வளவரை - செல்வத்தின் எல்லை.

49 காலமறிதல்

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 1

பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு. 2

அருவினை என்ப உளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 3

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின். 4

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். 5

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. 6

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 7

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காந் தலை. 8

எய்தற்கு அரியது இசைந்தக்கால் அந்நிலையே]
செய்தற்கு அரிய செயல். 9

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்]
குத்தொக்க சீர்த்த விடத்து. 10

---

1. கூகை- கோட்டான்.இகல் - பகை. 2. தீர்தல்- நீங்குதல். ஆர்த்தல் - பிணித்தல். 3. அருவினை - செய்தற்கரியவினை. 4. ஞாலம் - உலகத்தை ஆள்வதற்கு. 5. கருதல் - எதிர்பார்த்தல். 6. தகர்-செம்மறிக்கடா. 7. வேர்தல் - கோபித்தல். 8. செறுநர்- பகைவர். கிழக்காந்தலை-அவன் தலைகீழாகும். 10.கூம்புதல்-குவிதல்.

50 இடனறிதல்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது. 1

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவுந் தரும்.

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். 3

எண்ணியா ரெண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 4

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 5

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடு
நாவாயும் ஓடா நிலத்து. 6

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணிய யிடத்தாற் செயின். 7

சிறுபடையான் செல்லிடஞ்சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 8

சிறைநலனுஞ் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தொடு ஒட்ட லரிது. 9

காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. 10

---

2. முரண் - மாறுபாடு. மொய்ம்பு - வலிவு. 3. ஆற்றார் - வலியில்லாதார். 4. துன்னல் - பொருந்தல். 5. அடுதல் - வெல்லுதல். 6. நாவாய் - நான்குபக்கம். 8. உறும்படையான் - பெரும்படையுடையஅரசன். 9. சிறைத்தல்-அழித்தல். 10. களர் - சேற்றுநிலம்.

51 தெரிந்து தெளிதல்

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். 1

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கண்ணே தெளிவு. 2

அரியகற்று ஆசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 3

குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 4

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். 5

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. 6

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். 7

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 8

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 9

தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவுந்
தீரா இடும்பை தரும். 10

---

1. உயிரச்சம் - உயிரால்வரும்பயம். 2. குடி – உயர்ந்தகுடி 3. வெளிறு - வெண்மை. 5. கட்டளைக்கல்–மாத்து உரைக்குங்கல். 6. ஓம்புக - ஒழிக. 7. கந்து-பற்றுக்கோடு. 9. தேறுதல் - தெளிதல். 10. ஐயுறவு - ஐயப்பாடு.

52 தெரிந்து வினையாடல்

நன்மையுந் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 1

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 2

அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கு
நன்குடையான் கண்ணே தெளிவு. 3

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். 4

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. 5

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த வுணர்ந்து செயல். 6

இதனை யிதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். 7

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற் குரியனாகச் செயல். 8

வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்குந் திரு. 9

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. 10

---

1. தன்மையான் - விரும்பியஇயல்பினையுடையான். 2. வாரி - வருவாய். வளம்படுத்தல் - வளத்தல். 5. செய்கிற்பான் - செய்யவல்லவன். 8. பின்றை - பிறகு. 9. வினை - முயலுதல். 10. கோடுதல்- வழுவுதல்.

53 சுற்றந்தழால்

பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 1

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும். 2

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. 3

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 4

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். 5

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத் தில். 6

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. 7

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 8

தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரண மின்றி வரும். 9

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல். 10

---

1. பற்று - செல்வம். 2. அருப்பு - கிளைத்தல். 3. கோடு - குளக்கரை. 4. சுற்றப்படல் - தழுவுதல். 5. அடுக்கல் - தொடர்தல் 6. பெருங்கொடையான் - வரையாது கொடுப்பவன். 7. நீரார்- இயல்பினை உடையவர். 10. இழைத்தல் - செய்தல். உழை—இடம்.

54 பொச்சாவாமை

இறந்த வெகுளியில் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. 1

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 2

பொச்சாப்பார்க் கில்லைப் புகழ்மை அதுவுலகத்து
எப்பால்நூ லோர்க்குந் துணிவு. 3

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 4

முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும். 5

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அஃதுவொப்ப தில். 6

அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின். 7

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 8

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 9

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். 10

---

1. இறந்தது - எல்லையில்லாதது. 2. நிச்சநிரப்புதல் - நாடோறும் வறுமையான் வருந்துதல். 3. எப்பால்நூலோர்க்கும் - எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும். 4. அரண் - காடு, மலை முதலியவற்றால் ஆகும்பயன். இழுக்கல்-மறைத்தல். 7. பொச்சாவாக்கருவி-மறத்தலில்லாதமனம். 9. மைந்து - வலி.

55 செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. 1

வான்நோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி. 2

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 3

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 4

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. 5

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். 6

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 7

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். 8

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். 9

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 10

---

1. ஓர்தல் - ஆராய்தல். 3. அந்தணர்நூல்-வேதம். 4. ஓச்சுதல்-செலுத்தல். 5. நாட்ட - நாட்டின்கண். 7. முட்டு - இடையூறு 9. கடிதல் - நீக்குதல். 10. கட்டல்-களைதல்.

56 கொடுங்கோன்மை

கொலைமேற் கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. 1

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றான் இரவு. 2

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். 3

கூழுங் குடியும் ஒருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 4

அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 5

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேன்
மன்னாவா மன்னர்க்கு ஒளி. 6

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. 7

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 8

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 9

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின். 10

---

1. அலை-அலைத்தல். வேந்து - அரசன். 4. கூழ்-பயிர். 5. தேய்த்தல் - குறைத்தல். படை-கருவி. 7. துளி-மழை. அளி - கருணை. 8. உடைமை - பொருளுடைத்தாயிருத்தல். படுதல் - வாழ்தல். 10. ஆபயன்குன்றும் - பசுக்களின்பால் குன்றும். அறுதொழில் - ஒதல், ஒதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், எற்றல்.

57 வெருவந்த செய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. 1

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர். 2

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 3

இறைகடிய னென்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 4

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய் கண்டன்ன துடைத்து. 5

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும். 6

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். 7

இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு. 8

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 9

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. 10

---

1. நாடுதல் - ஆராய்தல். 2. கடிதல் - இலகுவாகத்தண்டித்தல். எறிதல் - செய்தல். நீங்காமை-நிலைபெற்றல். 3. வெருவந்த - குடிகள் அஞ்சும்வினை. ஒருவந்தம் - ஒருதலை. 4. கடியன் - கொடியவன். உறை - ஆயுள். கடுகல்-குறைதல். ஒல்லை-விரைவு. 6. கண் - கண்ணோட்டம். அடுமுரண் - இரும்பு. 8. சீறுதல் - வெகுளல். 9. செரு - போர்.

58 கண்ணோட்டம்

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. 1

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 2

பண்ணென்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண். 3

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்ட மில்லாத கண். 4

கண்ணிற்கு அணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும். 5

மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர். 6

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையும் இல். 7

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு
உரிமை யுடைத்திவ் வுலகு. 8

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 9

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 10

---

1. கழிபெருங்காரிகை-மிகுந்த அழகு. 2. நிலக்கு-நிலத்திற்கு. பொறை-அடக்கம். 3. பண்-இசை. இயைபு-பொருத்தம். 5. அணிகலம் - பூணும் ஆபரணம். 9. ஒறுத்தல் - ஆராய்தல்.

59 ஒற்றாடல்

ஒற்று முரைசான்ற நூலும் இவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். 1

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில். 2

ஒன்றினுன் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொடக்கிடந்த தில். 3

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. 4

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. 5

துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினுஞ் சோர்விலது ஒற்று. 6

மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று. 7

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினல் ஒற்றிக் கொளல். 8

ஒற்றொற்று உணராமை ஆள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும். 9

சிறப்பறிய வொற்றின்கண் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகும் மறை. 10

---

1. ஒற்று - வேவுகாரரை ஆளுதல். சான்றநூல் - நீதிநூல். 2. வல் - சீக்கிரம். 3. கொற்றம் - வெற்றி. 5. கடாவுரு - ஐயுறாத வடிவு. 6. படிவத்தர் - விரதமனுட்டித்தவர். 8. ஒற்றுதல் - ஆராய்தல் 9. ஒற்றுணர்தல் - ஒருவரைஒருவர் அறிதல்.

60 ஊக்கமுடைமை

உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று. 1

உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 2

ஆக்க மிழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார். 3

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. 4

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. 5

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 6

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு. 7

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு. 8

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 9

உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு. 10

---

3. கைத்து-கைப்பொருள். 4. அதர் - வழி. 5. நீட்டம் - வளப்பம். 7. சிதைவு-அழிவு. ஒல்கல் - தளர்தல். உரவோர்-ஊக்கமுடையவர். 8. உள்ளம் - ஊக்கம். வள்ளியம் - வண்மையுடையேம் 9. பரியது - பருத்தது. கோட்டது-கொம்பையுடையது.

61 மடியின்மை

குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 1

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 2

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னிலும் முந்து. 3

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றில் அவர்க்கு. 4

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 5

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. 6

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். 7

மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 8

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 9

மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லா மொருங்கு. 10

---

1. மடி - சோம்பல். 2. மடிகொண்டு - ஆசாரமாகக்கொண்டு. 4. உஞற்று - முயற்சி. 5. மறவி - மறதி. கெடுநீர் - நீடித்துச்செய்யும்இயல்பு. 6. படியுடையார் -நிலமுடையவர்கள். 8. ஒன்னார்-பகைவர். 9. மாற்றல் - ஒழிதல். 10. தாயது - தாவியது.

62 ஆள்வினையுடைமை

அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 1

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு. 2

தாளாண்மை யென்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. 3

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 4

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். 5

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 6

மடியுளான் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். 7

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி. 8

தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும். 9

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். 10

---

1. அசாவுதல் - தளர்தல். 2. தீர்தல். - கைவிடல். 3. தாளாண்மை - முயற்சி. 4. வாளாண்மை-வாளை ஆளுதல். 6. திரு-செல்வம். இன்மை - வறுமை. 7. மா - கருமை. முகடி-மூதேவி. 10. ஊழ் - வினை. உப்பக்கம் -புறம். உலைவு - தளர்தல்.

63 இடுக்கணழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில். 1

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 2

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். 3

மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து. 4

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். 5

அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர். 6

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல் 7

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்ப முறுதல் இலன். 8

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 9

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு. 10

---

2. வெள்ளத்தனைய - வெள்ளத்தைப்போன்று கரையில்லாத. 3 படுப்பர் - விளைப்பர். இம்பை - துன்பம். 4. மடுத்தல் - விலகுதல். பகடு - எருது. 5. அழிவிலான் - தன்கோட்பாடுவிடாதான். 6. ஓம்புதல்தேற்றாதவர் - இவறுதலையறியாதார். 9. உறுதல்-அடைதல். 10. இன்னாமை - துன்பம்.

அங்கவியல்

---

64 அமைச்சு

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யும்
அருவினையும் ஆண்டது அமைச்சு. 1

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. 2

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. 3

தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. 4

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. 5

மதிநுட்ப நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை. 6

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை யறிந்து செயல். 7

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 8

பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும். 9

முறைபடச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். 10

---

1. கருவி - துணைக்கருவி. 2. வன்கண் - வினைசெய்தற்கண் அசைவின்மை. 3. பொருத்தல் - போர்செய்தல். 7. செயற்கை - செய்யுந்திறங்கள். 8. அறி-அறிவு. 9. தெவ்உறும்-பகைவர்உறுவர்.

65 சொல்வன்மை

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று. 1

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. 2

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 3

திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில். 4

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து. 5

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள். 6

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 7

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 8

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். 9

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார். 10

---

2. சோர்தல் - தவறுதல். 3. கேளார் - தன்சொல்லை ஏற்றுக் கொள்ளாதார். வேட்கை-விருப்பம். 6. கோள்-துணிபு. 8. நிரந்து-வரிசைப்பட. 9. மன்ற - தெளிவாக. 10. இணர் - கொத்து.

5

66 வினைத்தூய்மை

துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும். 1

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 2

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
யாஅதும் என்னு மவர். 3

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 4

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. 5

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 6

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 7

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 8

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 9

சலத்தாற் பொருள்செய்து ஏமாக்கல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ அற்று. 10

---

2. ஒருவுதல் - ஒழிதல். 3. ஓதல் - ஓவுதல். 4. இளிவந்த - இழிவானசெயல்கள். 5. இரங்குதல்-வருந்துதல். 6. ஈன்றாள்-தாய். 7. பழிமலைந்து - பழிசுமந்து. 8. பீழை - துன்பம்.

67 வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. 1

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். 2

கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை யிடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும். 3

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். 4

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி யுள்ளப் படும். 5

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 6

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னா ருடைத்து. 7

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல். 8

துன்பம் உறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 9

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. 10

---

1. திட்பம் - திண்மை. 2. ஓரால்-ஒருவுதல். ஒல்கல்-தளர்தல். 3. எற்றாவிழுமம்-அறியாத்துன்பம். 5. வீறு-சிறப்பு. 7. எள்ளல் - இகழ்தல். 8. தூங்கல் - தாமதித்தல். 9. உறுதல் - அடைதல்.

68 வினைசெயல் வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 1

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 2

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். 3

வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்காற்
தீயெச்சம் போலத் தெறும். 4

பொருள்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 5

முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 6

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல். 7

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 8

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். 9

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 10

---

1. தாழ்ச்சி - தாமதம். 3. ஒல்லுதல்-இயலுதல். செல்லும்வாய்-உபாயம். 4. தெறுதல் – கெடுத்தல். 5. இருள் - மயக்கம். 8. யாத்தல் - பிணித்தல். 9. ஒட்டிக்கொளல் - நட்பாக்கிக்கொள்ளுதல்.

69 தூது

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. 1

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. 2

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 3

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 4

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது. 5

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது. 6

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை. 7

தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 8

விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கண் அவன். 9

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாந் தூது. 10

---

1. ஆன்றகுடி - அமைச்சுபூணத்தக்ககுடி. பண்பு - இலக்கணம் 4. செறிவு-கூட்டம். 5. தூவாத- தூய்மையில்லாதவை. 6. செலச்சொல்லல் - பகைவர் மனங்கொள்ளச் சொல்லுதல். 7. கடன்-செய்யுமுறைமை. 8. வழியுரைப்பான்- தூதுசொல்பவன்.

70 மன்னரைச்சேர்ந்தொழுகல்

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 1

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கந் தரும். 2

போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 3

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. 4

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை. 5

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 6

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல். 7

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். 8

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். 9

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். 10

1. இகல் - மாறுபடுதல். 3. கடுத்தல்-ஐயுறல். 5. ஓர்தல்-செவி மடுத்துக்கேட்டல். 9. கொள்ளாதவை - விரும்பாதவை. 10. கெழுதகைமை - உரிமை.

71 குறிப்பறிதல்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 1

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 2

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். 3

குறித்தது கூறாமைக் கொள்வாரொடு ஏனை
யுறுப்போ ரனையரால் வேறு. 4

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். 5

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். 6

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும். 7

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின். 8

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின். 9

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்லது இல்லை பிற. 10

---

1. வையக்கு - வையத்திலுள்ளவர்க்கு. 4. ஓரனையர் - ஒரு தன்மையராக ஒப்பர். 7. முதுக்குறைந்தது-அறிவின்மிக்கது. காய்தல் - கோபித்தல். 9. கேண்மை - நட்பு. வகைமை - தன்மை.

72 அவையறிதல்

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 1

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 2

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல். 3

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். 4

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 5

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. 6

கற்றறிந்தார் கல்வி விளக்குங் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து. 7

உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 8

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். 9

அங்கணத்து ளுக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். 10

2. இடை – செவ்வி. 3. வல்லது - கற்றுவல்லகலை. 5. முது வர் - அறிவிற்சிறந்தவர். கிளத்தல்-சொல்லல். 6. ஆறு-நன்னெறி. 7. கசடு - குற்றம். 8. பாத்தி - பயிர். 9. புல்லவை - புல்லறிவாளரின்குழு. பொச்சாப்பு - மறதி.

73 அவையஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை அவர். 1

கற்றாருட் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 2

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர். 3

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 4

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. 5

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. 6

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். 7

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 8

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லார் அவையஞ்சு வார். 9

உளரெனினும் இல்லாரோடு ஒப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 10

செலச்சொல்லல் - கேட்போர்கொள்ளும் வகைஉரைத்தல். 3. அரியர் - சிலர். 4. மிக்க - அரியபொருள். 6. வன்கண் - வீரம். 8. பல்லவை - பலநூல்கள். 9. கடை - கடையர். 10. இல்லார் - இறந்தவர்.

74 நாடு

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. 1

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 2

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு. 3

உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேராது இயல்வது நாடு. 4

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பும் இல்லது நாடு. 5

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டில் தலை. 6

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. 7

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 8

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு. 9

ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு. 10

---

1. தள்ளா - குறையாத 2. பெட்டக்கது - விரும்பற்பாலது. 4. இயல்வது - நடைபெறுவது. 7. இருபுனல் - கீழ்நீர் மேனீர். அரண் - நகரி. 8. நாடுதல் - விருந்துதல். 10. அமைவு-மேற்கூறிய குணங்கள்.

75 அரண்

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 1

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண். 2

உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கு நூல். 3

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
ஊக்கம் அழிப்ப தரண். 4

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். 5

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லா ளுடைய தரண். 6

முற்றியும் முற்றாது எரிந்து மறைப்படுத்தும்
பற்றற்கு அரிய தரண். 7

முற்றாற்றி முற்றி அவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண். 8

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். 9

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண். 10

---

1. ஆற்றுபவர் - பிறர்மேற்படை யெடுத்துச்செல்பவர். தற்போற்றுவர் - தன்னைக்காத்துக்கொள்பவர். 2. அணிநிழற்காடு - அடர்ந்துகுளிர்ச்சியான நிழலைத்தரும் காடு. 4. உறுதல்-அடைதல். 5. கொள்ளல் - புறத்தார்வெல்லுதல். 6. நல்லாள் - சுத்தவீரர். 7. முற்றுதல் - முற்றுகைசெய்தல். 9. வீறு . வெற்றி.

76 பொருள்செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். 1

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. 2

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 3

அறன்ஈனும் இன்பமும் ஈனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 4

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 5

உருபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 6

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியால் உண்டு. 7

குன்றேறி ஆனைப்போர் கண்டற்றால்தன் கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. 8

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். 9

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கொண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. 10

---

1. பொருளல்லவர் - மதிக்கப்படாதவர். 3. பொய்தல் - அழிதல். இருள் - பகையாகிய இருள். 4. திறன் - வகை. 5. புரளல் - கழிதல். 6. உறுபொருள் - புதையல். தெறுபொருள் - தெறுதலான் வரும்பொருள். 7. செவிலி - வளர்த்ததாய். 9. எஃகு-கூரிய படைக்கலம். 10. காழ்த்தல் - முதிர்தல்.

77 படைமாட்சி

உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாந் தலை. 1

உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது. 2

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 3

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்கண் அதுவே படை. 4

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை. 5

மறமான மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 6

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. 7

அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும். 8

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. 9

நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
தலைமக்கள் இல்வழி இல். 10

---

1. வெறுக்கை - செல்வம். 2. உலைவு - அழிவு. 3. உயிர்ப்பு - பெருமூச்சு. 4. அறைபோதல் – கீழறுக்கப்படல். 5. உடற்றுதல் - வெகுளல். 6. மறம் - வீரம். 8. அடற்றகை - பகைவர்மேற்சென்றடுதல். 9. துனி - வெறுப்பு. 10. நிலைமக்கள் - தளராது போர்செய்பவர்.

78 படைச்செருக்கு

என்னைமுன் னில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர். 1

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 2

பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. 3

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 4

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு. 5

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை எடுத்து. 6

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
சுழல்யாப்புக் காரிகை நீர்த்து. 7

உறினுயி ரஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். 8

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். 9

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பிற் சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து. 10

---

1. தெவ்விர் – பகைவர். 2. பிழைத்தல்-தப்புதல். 3. ஊராண்மை - உபகாரியாந்தன்மை. 5. விழித்தகண் - வெகுண்டுநோக்கிய கண். 6. விழுப்புண்-முகத்தினும்மார்பினும் பட்டபுண். 7. இசை-புகழ். 9. ஒறுத்தல் - எள்ளுதல். 10. புரந்தார் - அரசர்.

79 நட்பு

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. 1

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 2

நவிறொறு நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 3

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. 4

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 5

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. 6

அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்ல லுழப்பதாம் நட்பு. 7

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதா நட்பு. 8

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 9

இனையர் இவரெமக்கு இன்னம்யா மென்று
புனையினும் புல்லென்னும் நட்பு. 10

---

2. நீரவர் அறிவுடையோர். மதி - சந்திரன். 3. நவிலல்- கற்றல். 4. நட்டல் - சிநேகித்தல். 5. கிழமை - உரிமை. 7. அழிவினவை - தீநெறி. ஆறு - நன்னெறி. 8. உடுக்கை - ஆடை 9. கொட்பு - திரிபு. 10. புனைதல் - உரைத்தல்.

80 நட்பாராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. 1

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். 2

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. 3

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு. 4

அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 5

கேட்டினு முண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். 6

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். 7

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 8

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும். 9

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 10

---

1. வீடு – விடுதல். 2. கடைமுறை - முடிவு. 3. யாத்தல் - செய்தல். 4. குடி - உயர்ந்தகுடி. 5. அல்லது - உலகவழக்கல்லது. 6. கிளைஞர் - சுற்றத்தார். 7. ஊதியம் - பேறு. 8. சிறுகுதல்-சுருங்குதல். 10. மருவுதல் - பயிலல்.

81 பழமை

பழமை யெனப்படுவது யாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 1

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன். 2

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை. 3

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். 4

பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 5

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 6

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 7

கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின். 8

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 9

விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பிற் றலைப்பிரியா தார். 10

---

1. கிழமை - உரிமை. கீழ்ந்திடல் - சிதைத்தல். 2. கெழுதகைமை - அன்பு. உப்பாதல் - இனியராதல். 4. விழைதகை - விரும்பப்படுந்தன்மை. 5. நோதக்க - வெறுக்கத்தக்கவை. 6. எல்லை - வரம்பு. 7. அழிவந்த - அழிவுவாத்தக்கவை. 8. இழுக்கம் - பிழை. 9. கெடாஅ - கெடாத என்பதனீறு விகாரத்தாற் றெக்கது. 10. பழையார் - நண்பர்.

82 தீநட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. 1

உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என். 2

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரும் நேர். 3

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா அன்னார்
தமரில் தனிமை தலை. 4

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 5

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும். 6

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும். 7

ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 8

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 9

எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு. 10

---

1. போலினும் - போன்றாராயினும். பண்பிலார் - தீக்குணமுடையவர். 2. ஒப்பிலார் - பிறரொடு பொருத்தமிலார். 3. சீர்தூக்கும் - பயனளவு பார்க்கும். 4. அமரகம் - போர்க்களம். மா - புரவி. 6. பேதை-அறிவிலான். பெருங்கெழீ - மிக்க செறிந்த. 7. நகைவகையர்-பலவகையான் நகுவித்துத் தாம் பயன் அடைபவர். 8. உடற்றுதல் - கடத்தல். 9. தொடர்பு-நட்பு. மன்னோ; அசைநிலை. 10. கெழீஇ - நட்பாடி. மன்று - அவை.

83 கூடாநட்பு

சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 1

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 2

பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது. 3

முகத்தி னினிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும். 4

மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று. 5

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும். 6

சொல்வணக்க மொன்னார் கண்கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். 7

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 8

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. 9

பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்டு
அகநட் பொரீஇ விடல். 10

---

1. சீரிடம் - தகுந்த சமயம். பட்டடை - மதகு அடைக்குங் கல். 3. மாணார்க்கு - பகைவர்க்கு. 4. நகாஅ - நகைத்து. 6. ஒட்டார் - பகைவர். 8. படை - படைக்கலம். 9. சா - சாதல். 10. நட்டு - நட்புச் செய்து.

84 பேதைமை

பேதைமை யென்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். 1

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல் 2

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். 3

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல். 4

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்தும் அளறு. 5

பொய்படும் ஒன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 6

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 7

மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின். 8

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். 9

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 10

---

1. பேதைமை - அறிவின்மை. ஏதம் - கேடுபயப்பன. ஊதியம் - ஆக்கம் பயப்பன. 2. கையல்லது - அறிஞர் கடிந்த செயல். 3. நார் இன்மை - அன்பில்லாமை. 4. ஓதி - அறிவு நூல்களைக் கற்று. 5. அளறு - நிரயம். ஒருமை - ஒருபிறப்பு. 6. புனை - விலங்கு. 7. தமர் - உறவோர். 8. களித்தற்று - மதுவுண்டு மயங்கினாற்போலும். 10. கழாக்கால் - கழுவாத காலை.

85 புல்லறிவாண்மை

அறிவின்மை யின்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 1

அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம். 2

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. 3

வெண்மை யெனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னுஞ் செருக்கு. 4

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயந் தரும். 5

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்றம் மறையா வழி. 6

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 7

ஏவவுஞ் செய்கலான் தான்றேறான் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். 8

காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு. 9

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 10

---

1. வைதல் - பழித்தல். 2. பெறுவான்தவம் - பெறுகின்றவன் நல்வினையே. 3. பீழிக்கும்பீழை - வருத்தும் வருத்தம். 4. வெண்மை - புல்லறிவுடைமை. ஒண்மை - நல்லறிவு. 6. மறையாவழி - கடியாராயின். 7. அருமறை-பெறுதற்கரிய உபதேசம். பெருமிறை-மிக்க வருத்தம். 8. செய்கலான் - செய்யான். 10. அலகை - பேய்.

86 இகல்

இகலென்ப எல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய். 1

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. 2

இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். 3

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். 4

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 5

இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலும் நணித்து. 6

மிகன்மேவல் மெய்ப்பொருள் காணார் இகன்மேவல்
இன்னா வறிவி னவர். 7

இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாங் கேடு. 8

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. 9

இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னய மென்னுஞ் செருக்கு. 10

---

1. பகல் - கூடாமை. இகல் - மாறுபடுதல். பாரிக்கும் - வளர்க்கும். 2. பற்றா - வெறுப்பன. 3. தாவில்விளக்கம் - அழியாப்புகழ். 5. மிகலூக்கும் - வெல்லக்கருதும். 6. மிகல் - மேன்மேலூக்குதல். 8. எதிர்சாய்தல் - எதிர்தலையொழிதல். 10. நகலான் - நட்பொன்றானே.

87 பகைமாட்சி

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேன் மேக பகை. 1

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்றுவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. 2

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு. 3

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 4

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. 5

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 6

கொடுத்துங் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 7

குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப் புடைத்து. 8

செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 9

கல்லான் வெகுளுஞ் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை யொல்லா தொளி. 10

---

1. மாறேற்றல்-பகையாயெதிர்தலை. ஓம்புக-ஒழிக. 2. துப்பு-வன்மை. 3. அமைவு - பொருத்தம். 4. நிறை-மறைபிறரறியாமை. 5. வழிநோக்கான் - நீதிநூலை யோதான். 6. பேணாமை-பகைமை. 9. சேண்இகவா இன்பம் - உயர்ந்த இன்பங்கள் நீங்கா. 10. ஒல்லானை -மேவாதானை.

88 பகைத்திறந்தெரிதல்

பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 1

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 2

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 3

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. 4

தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவன்
இன்றுணையாக் கொள்கவற்றி னொன்று. 5

தேறினுந் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 6

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 7

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. 8

இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 9

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 10

---

1. நகையேயும் - விளையாட்டின்கண்ணும். 3. ஏமுற்றவரினு மேழை - பித்துற்றாரினும் அறிவிலன். 4. பண்பு - இயல்பு. 6. பகான் - நீக்காது. 7. நோவற்க-தன்னோவு சொல்லற்க. 9. களையுநர்கை - களைவார்கையினை. 10. செயிர்ப்பவர் செம்மல் – பகைப் பாரது தருக்கினை.

89 உட்பகை

நிழனீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். 1

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 2

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 3

மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவுந் தரும். 4

உறன்முறையான் உட்பகை தோன்றின் இறன்முறையான்
ஏதம் பலவுந் தரும். 5

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்றல் அரிது. 6

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
உட்பகை உற்ற குடி. 7

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. 8

எட்பகவு அன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாங் கேடு. 9

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போடு உடனுறைந் தற்று. 10

---

1. தமர்நீர் - ஞாதியரின் இயல்புகள். 3. உலைவிடத்து - தளர்ச்சிவந்தவிடத்து. மட்பகை-மட்கலத்தை அறுக்குங்கருவி. 4. மனமாணா - மனந்திருந்தாத. 5. இறல் - இறத்தல். 6. பொன்றாமை- இறவாமை. 8. பொருத-தேயும். 9. எட்பகவு - எள்ளின்பிளவு. 10. குடங்கர் - குடங்கம் என்னும் வடசொற்றிரிபு.

90 பெரியாரைப் பிழையாமை

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாந் தலை. 1

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா இடும்பை தரும். 2

கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 3

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். 4

யாண்டுசென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 5

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 6

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாந்
தகைமாண்ட தக்கார் செறின். 7

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 8

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும். 9

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். 10

---

1. ஆற்றுவார் - முடிக்கவல்லார். 2. பேணாது - அவமதித்து. 3. அடல்வேண்டின் - கோறல்வேண்டின். 4. விளித்தல் - அழைத்தல். 5. வெந்துப்பின்வேந்து-பகைவர்க்கு வெய்தாய வலியினையுடையவேந்து. 7. வகைமாண்ட வாழ்க்கை-உறுப்பழகுபெற்ற அரசாட்சி. 8. குன்ற மதிப்பின் - கெடநினைப்பாராயின். 9. ஏந்திய கொள்கையார் - உயர்ந்த விரதங்களையுடையார். வேந்தன் - இந்திரன்.

91 பெண்வழிச்சேறல்

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 1

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 2

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 3

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று. 4

இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 5

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 6

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. 7

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். 8

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல். 9

எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 10

---

1. அது - அவ்வின்பம். 2. பேணாது - ஆண்மையை விட்டு. 4. மறுமையிலாளன் - மறுமைப்பயனில்லாதான். 6. இமையார்- அமரர். பாடிலர்—ஆண்மையிலர். 7. பெண்ணேவல் - மனைவியின் ஏவற்றொழில். 8. பெட்டாங்கு - விரும்பியபடி. 10. இடன்- செல்வம்.

92 வரைவின்மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 1

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 2

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 3

பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 4

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 5

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 6

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். 7

ஆயு மறிவின ரல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 8

வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 9

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 10

---

1. ஆய்தொடியார் - மகளிர். 2. நள்ளாவிடல் - பொருந்தாது விடுக. 4. தோயார் - தீண்டார். 6. தகை செருக்கி - ஆடல், பாடல், அழகென்பனவற்றாற் களித்து. 7. பேணி - விரும்பி. 8. அணங்கு - காமநெறியான் உயிர்கொள்ளுந் தெய்வம். 9. பூரியர் - கீழ்மக்கள். 10. கவறு - சூது.

93 கள்ளுண்ணுமை

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். 1

உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். 2

ஈன்றாள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 3

நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு. 4

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 5

துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 6

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். 7

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 8

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 9

கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 10

---

1. உட்கப்படார் - அஞ்சப்படார். 3. களி - கள்ளுண்டு களித்தல். 5. மெய்யறியாமை - மெய்ம்மறப்பு. 6. துஞ்சினுர் - உறங்கினவர். 7. உள்ளொற்றி - உண்ணிகழ்கின்றதுய்த்துணர்ந்து. 8. ஒளித்ததூஉம் – ஒளித்தகுற்றமும். 9. தீத்துரீஇ - விளக்கினல் நாடுதல்.

94 சூது

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 1

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. 2

உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 3

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். 4

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 5

அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியான் மூடப்பட் டார். 6

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின். 7

பொருள்கெடுத்துப் பொய்மேற்கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்குஞ் சூது. 8

உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின். 9

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்பம்
உழத்தொறூஉங் காதற்று உயிர். 10

---

3. உருள் ஆயம் - உருளுங்கவற்றின் கட்பட்ட ஆயம். பொருளாயம்-பொருளும், வருவாயும். 4. சிறுமை - துன்பம். 5. கையும் - கைத்தொழிலினையும். 6. அகடாரார் - வயிறாரப் பெறார். 8. உழப்பிக்கும் - உறுவிக்கும். 9. ஆயம் - சூது. 10. இழத்தொறும் – இழக்குந்தொறும்.

95 மருந்து

மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 1

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின். 2

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. 3

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 4

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு. 5

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். 6

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 7

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 8

உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல். 9

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. 10

---

1. வளிமுதலா வெண்ணியமூன்று - வாதம், பித்தம், சிலேட்டுமம் என்னும் மூன்று. 3. நெடி துய்க்குமாறு - நெடுங்காலம் கொண்டு செலுத்தும் நெறி. 4. துவரப்பசித்து - மிக்கபசித்து. 5. ஊறுபாடு - துன்பம். 6. கழிபேர் - மிகப்பெரிய. 7. தீ - வயிற்றுத்தீ. 8. நோய் முதல் நாடி - நோய்வருதற்காரணத்தை அறிந்து. 9. உற்றான் - ஆதுரன்.

ஒழிபியல்

---

96 குடிமை

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 1

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 2

நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 3

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். 4

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று. 5

சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். 6

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 7

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 8

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 9

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 10

---

1. இற்பிறந்தார் - குடிப்பிறந்தார். செப்பம் - செம்மை 3. வகை - கூறுபாடு. 4. கோடி - கோடியளவிற்குரிய பொருள் 5. உள்வீழ்ந்தக்கண்ணும் - பண்டையிற் சுருங்கிய விடத்தும். 6. அமைவின்மை - அம்மரபிற் கேலாமை. 7. மதி - சந்திரன். 8. நாரின்மை - ஈரமின்மை. 9. கால்-முளை.

97 மானம்

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். 1

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 2

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 3

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை. 4

குன்றின் அனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின். 5

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 6

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 7

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 8

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 9

இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு. 10

---

1. குன்றவரும் - குடிப்பிறப்பைத் தாழ்த்துஞ் செய்கைகள். 2. சீரினும் - புகழ்செய்யுமிடத்தும். 3. உயர்வு - பணியாமை. 4. நிலை-உயர்ந்தநிலை. 5. குன்றின் அனையார்-குடிபிறப்பால் மலை போல உயர்ந்தோர். 6. என்மற்று-இனி அது செய்வது யாது. 7. ஒட்டார்-தன்னை யிகழ்வார். 8. ஊன்-உடம்பு. மருந்தோ-பிறவிப்பிணியைத் தீர்க்கும் மருந்தோ. 10. இளி-தாழ்வு. ஒளி-புகழ் உடம்பு.

98 பெருமை

ஒளியொருவற் குள்ள வெறுக்கை இளியொருவற்கு
அஃதிறந்து வாழ்து மெனல். 1

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 2

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். 3

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 4

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல். 5

சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு. 6

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின். 7

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து. 8

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல். 9

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 10

---

1. வெறுக்கை-ஊக்கம். 3. கீழல்லார்-சிறந்த குணமுடையவர். 4. ஒருமைமகளிர்-கற்புடை மங்கையர். 5. ஆற்றின் ஆற்றுவார் - செய்யுநெறியாற் செய்யவல்லவராவார். 7. இறப்பு-குற்றம். 8. அணியும்-புனையும். 10. அற்றம்-அவமானம்.

99 சான்றாண்மை

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 1

குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. 2

அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண். 3

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 4

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 5

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். 6

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 7

இன்மை யொருவற்கு இளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 8

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி யெனப்படு வார். 9

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 10

---

1. கடன் அறிந்து - தகுவதறிந்து. கடன் - இயல்பு. 4. நோன்மை-தவம். நலத்தது-அறத்தின்கண்ணது. 5. மாற்றார்-பகைவர். மாற்றும் - பகைமையொழிக்கும். 6. துலை- ஒப்பு. 9. ஊழி-கடல். 10. சான்றவர்-சற்குணம் நிறைந்தவர்.

100 பண்புடைமை

எண்பதத்தா லெய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 1

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. 2

உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதாம் ஒப்பு. 3

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 4

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 5

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். 6

அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 7

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. 8

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். 9

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. 10

---

1. எண்பதத்தால்-எளிய செவ்வியாதலால். வழக்கு-நன்னெறி. 2. பண்புடைமை--எல்லாரியல்புகளும் அறிந்தொத்தொழுகுதல். 5. பாடறிவார் - பிறரியல்புகளை அறிந் தொழுகுவார். 6. பட்டு-படவென்பது திரிந்துநின்றது. 9. நகல்-உண் மகிழ்தல். 10. கலந்தீமை-கலத்தீமையென்பதன் விகாரம்.

101 நன்றியில்செல்வம்

வைத்தான் வாய்சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

பொருளானும் எல்லாமென்று ஈயாது உவறும்
மருளானும் மாணாப் பிறப்பு. 2

ஈட்டம் இவறி யிசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 3

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரான்
அச்சப் படாஅ தவன். 4

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடியுண் டாயினு மில். 5

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான். 6

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 7

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 8

அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 9

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து. 10

---

1. வாய்சான்ற-தன்மனைநிறைதற் கேதுவாய. 2. மருள்-மயக்கம். 3. இவறி-விரும்பி. பொறை-பாரமாம். 5. துய்ப்பதும்-தான்அநுபவிப்பதும். 6. ஏதம்-நோய். 7. ஆற்றாதான்-கொடாதவன். 8. நச்சப்படாதவன்-வறியோரால் அடையப்படாதவன். 9. தற்செற்று-தன்னைவெறுத்து. 10. துனி-வெறுப்பு.

102 நாணுடைமை

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1

ஊணுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 2

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு. 3

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. 4

பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி யென்னும் உலகு. 5

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 6

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டான்
உண்டுறவார் நாணாள் பவர். 7

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து. 8

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 9

நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 10

---

1. கருமத்தால்-இழிந்த கருமங் காரணமாக. 2. எச்சம்-உறக்கமும். அச்சமும், காமமும். 4. அணியன்றோ-ஆபரணமாம். 5. உறைபதி-உறைவிடம். 6. பேணலர்-விரும்பார். 9. சுடும்-கெடுக்கும். 10. உயிர்மருட்டியற்று-உயிருடைத்தாக மயக்கினாற் போலும்.

103 குடிசெயல்வகை

கருமஞ் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில். 1

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையான் நீளுங் குடி. 2

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 3

சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. 4

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 5

நல்லாண்மை யென்பது ஒருவர்க்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். 6

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 7

குடிசெய்வார்க் கில்லைப் பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும். 8

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு. 9

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லா ளிலாத குடி. 10

---

1. கைதூவேன்-கையொழியேன். பீடு-பெருமை. 2. நீள்வினை-இடையறாத கருமச்செயல். 3. மடிதற்று-ஆடையை இறுக வுடுத்தல். 5. குடிசெய்து-குடியையுயரச்செய்து. 8. மடிசெய்து-சோம்பியிருந்து. 9. குற்றமறைப்பான்-இடையூற்றை விலக்கமுயலுவான். 10. கால்-முதல்.

104 உழவு

சுழன்றுமேர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. 1

உழுவார் உலகத்தார்க்கு ஆணி யஃதாற்றாது
எழுவாரை யெல்லாம் பொறுத்து. 2

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். 3

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 4

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 5

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. 6

தொட்டிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 7

ஏரினும் நன்றால் எருவிடுதல் நட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. 8

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 9

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 10

---

1. ஏர்ப்பின்னது - ஏருடையார் வழியது. உழந்தும்-எல்லா வருத்தமுற்றும். 2. பொறுத்து-தாங்குதலால். 4. அலகு-கதிர். நீழலவர்-தண்ணளியுடையவர். 5 மாலையவர் - இயல்பாகவுடையவர். 6. விழைவதூஉம்-யாவரும் விழைமுணவும். 7. உணக்கில் - காய விடுவானாயின். 8. கட்டபின்-களைகட்டால். 9. கிழவன் - நிலத்திற்குரியவன். 10. அசைஇ - சோம்பி.

105 நல்குரவு

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே யின்னா தது. 1

இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 2

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னும் நசை. 3

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். 4

நல்குர வென்னும் இடும்பையுட் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும். 5

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 6

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 7

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலும் நிரப்பு. 8

நெருப்பினுள் துஞ்சலு மாகும் நிரப்பினுள்
யாதொன்றுங் காண்பா டரிது. 9

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று. 10

---

1. இன்னாதது-துன்பந் தருவது. 3. தோலும்-இழிதொழில்களையும் இளிவந்தசொற்களையும். நசை-விருப்பம். 5. குறை, இசை நிறை. 7. அறஞ்சாரா-அறத்தோடியைபில்லாத. 8. நிரப்பு-நல்குரவு. 10. துவர-முற்றும்.

106 இரவு

இரக்க இரத்தக்கார்க் காணிற் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று. 1

இன்பம் ஒருவர்க்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 2

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்பும் ஓரேஎர் உடைத்து. 3

இரத்தலும் ஈதலே போலுங் கரத்தல்
கனவினுந் தேற்றாதார் மாட்டு. 4

கரப்பிலார் வையகத்து உண்மையாற் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது. 5

கரப்பிடும்பை யில்லாரைக் காணின் இரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 6

இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. 7

இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 8

ஈவார்கண் என்னுண்டாந் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை. 9

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. 10

---

2. துன்பமுறாஅவரின்-ஈவோரால்தான் துன்புறாது வருமாயின். 3. ஓரேர் - ஓர் அழகு. 4. தேற்றாதார்-நினையாதார். 6. கரப்பிடும்பை-உள்ளதுகரத்தல் என்னும்நோய். 8. ஈர்ங்கண்மா ஞாலம்-குளிர்ந்த விடத்தையுடைய பெரியஞாலத்துளார். 9. தோற்றம்-புகழ்.

107 இரவச்சம்

கரவாது உவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். 2

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். 3

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு. 4

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில். 5

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில். 6

இரப்பன் இரப்பாரை யெல்லாம் இரப்பிற்
கரப்பார் இரவன்மின் என்று. 7

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 8

இரவுள்ள வுள்ளம் உருகுங் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 9

கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். 10

---

2. பரந்து கெடுக-அலமந்து கெடுவானாக, உலகியற்றியான்-உலகத்தைப்படைத்தவன். 3. வன்பாட்டது-வலிமைப்பாடுடையது. 4. இடமில்லாக்காலும்-நுகரவேண்டுவனவின்றி நல்கூர்ந்த வழியும். 5. தாள்தந்தது-முயற்சிகொடுவந்து தந்தது. தெண்ணீர் அடுபுற்கை-நீரோடு சேர்ந்த கூழ். 6. இரவின்-இரத்தலைப்போன்று. 10. சொல்லாட-சொன்னபொழுதே.

108 கயமை

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பார் யாங்கண்ட தில். 1

நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர். 2

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 3

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரில்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ். 4

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாஞ் சிறிது. 5

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 6

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கையர் அல்லா தவர்க்கு. 7

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். 8

உடுப்பதூஉம் உண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். 9

எற்றிற்கு உரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து. 10

— —

---

2. திருவுடையர்-நன்மையுடையர். அவலம்—கவலை. 4. கீழ்-கீழாயினோன். அகப்பட்டி-அகமாகியபட்டி. செம்மாக்கும்-இறுமாக்கும். 5. எச்சம்-அஃதொழிந்தால். 6. மறை-இரகசியம். 7. ஈர்ங்கை-தாமுண்டு பூசியகை. 8. பயன்படுவர்-உள்ளதுகொடுப்பர்.

காமத்துப்பால்

களவியல்

109 தகையணங்குறுத்தல்

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. 1

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. 2

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. 3

கண்டார் உயிருண்ணுந் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக்கு அமர்த்தன கண். 4

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 5

கொடும்புருவங் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண். 6

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். 7

ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. 8

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணியெவனோ ஏதில தந்து. 9

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 10

---

1. அணங்கு - தெய்வமகள். 2. தானை - சேனை. 3. கட்டு - கண்களையுடையது. 6. மறைப்பின் - விலக்கினவாயின். 8. உட்கும் - அஞ்சும். பீடு - வலி. 10. அடுநறா - அடப்படுநறா.

110 குறிப்பறிதல்

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன்று அந்நோய் மருந்து. 1

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாகம் அன்று பெரிது. 2

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். 3

யான்நோக்குங் காலை நிலன்நோக்குங் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும். 4

குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 5

உறாஅ தவற்போற் சொலினுஞ் செறாஅர்சொல்
ஒல்லை யுணரப் படும். 6

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு. 7

அசையியற்கு உண்டாண்டு ஓரேஎர் யான்நோக்கப்
பசையினள் பைய நகும். 8

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. 9

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. 10

---

1. உண்கண் - மையுண்டகண். நோய்நோக்கு - நோய்செய்யு நோக்கு. 2 செம்பாகம் - ஒத்தபாதியளவு. 5. சிறக்கணித்தல் - சுருங்குதல். 6. செறார் - செறுதலிலாதார். 7. செற்றார் - பகைவர். 3. ஓரேர் - நன்மைக்குறிப்பு. 10. கண்ணிணை - இருவர்கண்களும்.

111 புணர்ச்சிமகிழ்தல்

கண்டுகேட் டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. 1

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து. 2

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 3

நீங்கின் தெறூஉங் குறுகுங்காற் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றாள் இவள். 4

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 5

உறுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 6

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. 7

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 8

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமங்
கூடியார் பெற்ற பயன். 9

அறிதோறும் அறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. 10

---

1. உயிர்த்தும் - மோந்தும். ஒண்டொடி - ஒள்ளியதொட்டி. 3. தாம்வீழ்வார் - தாம் விரும்புமகளிர். 4. தெறூஉம் - சுடாநிற்கும். 5. தோட்டார் கதுப்பினாள் - பூவினையணிந்த தழைந்த கூந்தலையுடையவள். 7. அம்மா - அழகிய மாமைநிறம். 8. போழப் படா - அறுக்கப்படாத. 10. அறிதோறும் - நூல்களாலும் நுண்ணுணர்வானும் ஆராய்ந்துழி.]

112 நலம்புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். 1

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. 2

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு. 3

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. 4

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 5

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 6

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 7

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி. 8

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி. 9

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 10

---

1. அனிச்சம் - அனிச்சப்பூ. மென்னீரள் - மெல்லிய இயல்பையுடையவள். 2. மையாத்தல் - ஒவ்வாதவற்றை ஒக்குமெனக் கோடல். 3. முறி - தளிர். 5. நுசுப்பு - இடை. 6. பதியிற் கலங்கிய - தன்னிலையினின்று கலங்கித்திரிந்தன. 7. அறுவாய்-குறைந்த விடம்.

113 காதற்சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர். 1

உடம்பொடு உயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 2

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை இடம். 3

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. 4

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 5

கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர். 6

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக்கு அறிந்து. 7

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 8

இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னுமிவ் வூர். 9

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ் வூர். 10

---

1. பணிமொழி - மெல்லியமொழியினையுடையவள். 5. ஒள்ளமர்க் கண்ணாள் - ஒள்ளியவாய் அமரைச் செய்யுங்கண்ணினையுடையாள். 6. பருவரார் - வருந்துவதுஞ் செய்யார். 7. கரப்பாக்கறிந்து-மறைதலையறிந்து. 8. வேபாக்கறிந்து-வெய்துறலையறிந்து. 10. ஏதிலர் - அன்பிலர்.

114 நாணுத்துறவுரைத்தல்

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏம
மடலல்லது இல்லை வலி. 1

நோனா வுடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. 2

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 3

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை. 4

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர். 5

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். 6

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 7

நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும். 8

அறிகிலார் எல்லாரும் என்றேயென் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. 9

யாங்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 10

---

1. உழந்து - அனுபவித்து. 2. நோனாவுடம்பு-வருத்தத்தினைப் பொறாதவுடம்பு. 3. நாண் - இழிவாயின செய்தலை விலக்குவது. 4. புணை-தெப்பம். 5. தொடலை-மாலைபோல தொடர்ந்த. 6. படல் ஒல்லா - துயிலைப்பொருந்தா. 7. பெருந்தக்கது - மிக்கதகுதியினை யுடையது. 8. மன் அளியர் - மிகவும் அளிக்கத்தக்கார். 9. மறுகும்- சுழலாநின்றது.

115 அலரறிவுறுத்தல்

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால். 1

மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர். 2

உறுஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறுஅது பெற்றன்ன நீர்த்து. 3

கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை யிழந்து. 4

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 5

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. 6

ஊரவர் கௌவை பெருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். 7

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றாற் கௌவையாற்
காமம் நுதுப்பே மெனல். 8

அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. 9

தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை எடுக்குமிவ் வூர். 10

---

3. கௌவை - விளைந்தஅலர். 4. கவ்விது - அலர்தலையுடைத் தாயிற்று. அலர்தல் - மேன்மேன் மிகுதல். 5. களித்தொறும் - களிக்குந்தோறும். 7. இந்நோய் - இக்காமநோயாகிய பயிர். ஊரவர்- ஊரின்மகளிர். 8. நுதுப்பேமெனல் - அவித்துமென்று கருதுதல்.

கற்பியல்

116 பிரிவாற்றுமை

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 1

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தாற் புணர்வு. 2

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 3

அளித்தஞ்சல் என்றவர் நீப்பிற் றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு. 4

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கின் அரிதாற் புணர்வு. 5

பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை. 6

துறைவன் துறந்தமை தூற்றுகொன் முன்கை
இறையிறவா நின்ற வளை. 7

இன்னாது இனனில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. 8

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. 9

அரிதாற்றி அல்லல்நோய் நீங்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். 10

---

1. செல்லாமை - பிரியாமை. வல்லரவு - விரைந்துவருதல். 2. பார்வல் இன்கணுடைத்து - நோக்கு இன்பத்தைத் தாநின்றது. 3. அரோ, அசைநிலை. 4. தேறியாரென்பது தன்னைப்பிறர்போற் கூறல். 5. ஓம்பின் அமைந்தார் - ஆளுதற்கமைந்தாருடைய. 6. அரிது - விடப்படும். 8. இனன் - தோழியர்.

117 படர்மெலிந்திரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். 1

கரத்தலும் ஆற்றேனிந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும். 2

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா வுடம்பி னகத்து. 3

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னு மில். 4

துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினும் ஆற்று பவர். 5

இன்பங் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 6

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். 7

மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
என்னல்லது இல்லை துணை. 8

கொடியார் கொடுமையில் தாங்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. 9

உள்ளம்போன்று உள்வழிச் செல்கற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண். 10

---

1. மன் ஒழியிசைக்கண்வந்தது. 3. நோனா என்பது மெலிவானது. 4. இருவழியும் மன்னும் என்பது அசைநிலை. 5. துப்பு-பகை. 6. அதனிற்பெரிது-கடலினும் பெரியது. 7. கடுமை, ஈண்டு மிகுதிக்கணின்றது. 8. துயிற்றி-துயிலப்பண்ணுதலான். 10. நீந்தல-நீந்தா.

118 கண்விதுப்பழிதல்

கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது. 1

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன். 2

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. 3

பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வினோ யென்கண் நிறுத்து. 4

படலாற்றா பைதல் உழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண். 5

ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது. 6

உழந்துழந்து உண்ணீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். 7

பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண். 8

வாராக்கால் துஞ்சா வரிற்றுஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். 9

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து. 10

---

1. தண்டாநோய் - தணியாநோய். 2 பைதல் - துன்பம். 3. கதுமென - விரைந்து. கலுழும்-அழும். 4. பெயலாற்றா- தாமழுதலைமாட்டா வண்ணம். 7. அறுக-அற்றேபோக. 8. பெட்டார் - விழைந்தவர். 9. ஆரஞர் - பெறுதற்கரியதுன்பம். 10. மறையென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை.

119 பசப்புறுபருவரல்

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க்கு உரைக்கோ பிற. 1

அவர்தந்தார் என்னுந் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு. 2

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து. 3

உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. 4

உவக்காணெங் காதலர் செல்வார் இவக்காணென்
மேனி பசப்பூர் வது. 5

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. 6

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 7

பசந்தாள் இவளென்பது அல்லால் அவளைத்
துறந்தார் அவரென்பா ரில். 8

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவர் எனின். 9

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். 10

---

1. யார்க்கு உரைக்கோ-யார்க்குச்சொல்வேன். 2. தகையால்-பெருமிதத்தால். 3. சாயல் - அழகு. 4. பிறவும் ஓவும்; அசைநிலை 5. உவக்காண் இவக்காண் என்பன ஒட்டிநின்ற இடைச்சொற்கள் 6. அற்றம்-மெலிவு. 9. பட்டாங்கு - பட்டதுபட.

120 தனிப்படர்மிகுதி

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்ருரே
காமத்துக் காழில் கனி. 1

வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 2

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னுஞ் செருக்கு. 3

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். 4

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை. 5

ஒருதலையான் இன்னது காமங்காப் போல
இருதலை யானும் இனிது. 6

பருவரலும் பைதலும் காணன்கொல் காமன்
ஒருவர்கண் நின்ருெழுகு வான். 7

வீழ்வாரின் இன்சொற் பெருஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். 8

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு. 9

உருஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செருஅஅய் வாழிய நெஞ்சு. 10

---

1. தம்வீழப் பெற்றவர்-தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர். 2. அளி - கருணை. 3.வாழுநம் - வாழுதும். 4. கெழீஇயின்மை - நல்வினையின்மை. 6 காப்போல - காவினது பாரம் போல. 7. காமன் - மன்மதன். 9. நசைஇயார் - நச்சப் பட்ட காதலர். 10. செருய் - தூர்க்க முயல்வாயாக.

121 நினைந்தவர்புலம்பல்

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காமம் இனிது. 1

எனைத்தொன்று இனிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். 2

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். 3

யாமும் உளங்கொல் அவர்நெஞ்சத்து எந்நெஞ்சத்து
ஓஒ உளரே யவர். 4

தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்து ஓவா வரல். 5

மற்றியான் என்னுளேன் மன்னோ அவரோடியான்
உற்றநாள் உள்ள உளேன். 6

மறப்பின் எவனாவன் மற்கொன் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளஞ் சுடும். 7

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு. 8

விளியுமென் னின்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை யாற்ற நினைந்து. 9

விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி. 10

---

3. சினைப்பது-எழுவது. 4. ஓஒ உளரே - எப்பொழுதும் உளரேயாயிரா நின்றார். 5. கடி-காவல். 8. காயார்-வெகுளார். 9. விளியும் - கழியும். 10. படாதி-தோன்றா தொழிவாயாக.

122 கனவுநிலையுரைத்தல்

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து. 1

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன். 2

நனவினால் நல்கா தவரைக் கனவினாற்
காண்டலின் உண்டென் னுயிர். 3

கனவினான் உண்டாகுங் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு. 4

நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. 5

நனவென வொன்றில்லை யாயின் கனவினாற்
காதலர் நீங்கலர் மன். 6

நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது. 7

துஞ்சுங்கால் தோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. 8

நனவினான் நல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர். 9

நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினாற்
காணார்கொல் இவ்வூ ரவர். 10

---

1. விருந்து - உபசாரம். 2. கயலுண்கண் - கயல்போலுமை யுண்ட கண்கள். உயல்-காமநோய்க்குத் தப்புதல். 4. காமம்-இன்பம். 6. நீங்கலர் - பிரியார். 7. பீழிப்பது - வருத்துவது. 10. நம்நீத்தார் - நம்மை நீங்கினார்.

123 பொழுதுகண்டிரங்கல்

மாலையோ வல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1

புன்கண்ணை வாழி மருண்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. 2

பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். 3

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
எதிலர் போல வரும். 4

காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 5

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை யறிந்த திலேன். 6

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். 7

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலுங் கொல்லும் படை. 8

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 9

பொருண்மாலை யாளரை உள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர். 10

---

1. மாலை - சாயங்காலம். வேலை - இறுதிக்காலம். 2. புன்கண்ணை - ஒளியிழந்தாய். 3. பனியரும்பி-நடுக்கமெய்தி. 4, எதிலர்-அருளில்லார். 6. நோய்செய்தல் - துன்பஞ்செய்தல். 7. போது-பேரரும்பு. 9. மதிமருண்டு, மதிமருள என்பதன் விகாரம். 10. மருண்மாலை - மயங்குமாலைக்கண்ணே.

124 உறுப்புநலனழிதல்

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். 1

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். 2

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தாள் வீங்கிய தோள். 3

பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 4

கொடியார் கொடுமை உரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 5

தொடியொடு தோள்நெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூறல் நொந்து. 6

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து. 7

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். 8

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 9

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 10

---

1. சேண் - செய்மைக்கண். 2. பனிவாரும் - நீர்வார்கின்ற. 3. தணந்தமை - பிரிந்தமை. 4. பணை நீங்கி - பெருமையிழந்து. 5. தொல்கவின் - பழையவியற்கையழகு. 6. நோவல் - நோவாநின்றேன். 7. பாடு பெறுதியோ - மேம்பாடெய்த வல்லையோ.

125 நெஞ்சொடுகிளத்தல்

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கு மருந்து. 1

காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. 2

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல். 3

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று. 4

செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். 5

கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு. 6

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. 7

பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு. 8

உள்ளத்தார் காதல் அவராக உள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு. 9

துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்துங் கவின். 10

---

1. எவ்வம் - ஒன்றானுந்தீராமை. எனைத்தொன்றும் - யாதொன்றும். 3. பரிதல் - வருந்துதல். 4. கொளச்சேறி - கொண்டு செல்வாயாக. 5. உறுதல் - அன்புபடுதல். 6. பொய்க்காய்வு - நிலையில் வெறுப்பு. 7. யானோ என்னும் பிரிநிலை நீ பொறுப்பினும் என்பது பட நின்றது. 9. உள்ளத்தாராக - நின்னகத்தாராக. 10. துன்னாத - கூடாத.

126 நிறையழிதல்

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 1

காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளுந் தொழில். 2

மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 3

நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறையிறந்து மன்று படும். 4

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று. 5

செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
எற்றென்னை உற்ற துயர். 6

நாணென வொன்றோ அறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். 7

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. 8

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சங்
கலத்தல் உறுவது கண்டு. 9

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். 10

---

1. வீழ்த்த - கோத்த. கணிச்சி - கூந்தாலி. 2. கண்இன்று - கண்ணோட்டமின்றியிருந்தது.- 3. மன், ஒழியிசை. ஒகாரம், இரங்கல். 4. மறையிறந்து - மறைத்தலைக் கடந்து. 5. காமநோயுற்றார் - மானமுடையார். 7. அறியலம்-அறியமாட்டாதிருந்தோம். 8. பன்மாய - பல பொய்களைவல்ல. 9. கலத்தலுறுவது - கலத்தல் தொடங்குவது. 10 புணர்தல் - மிகநணுகுதல்.

127 அவர்வயின்விதும்பல்

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். 1

இலங்கிழாய் இன்று மறப்பினென் தோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து. 2

உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன். 3

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு. 4

காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோள் பசப்பு. 5

வருகமற் கொண்கன் ஒருநாட் பருகுவன்
பைதல்நோய் எல்லாங் கெட. 6

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். 7

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 8

ஒருநாள் எழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. 9

பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறினென்னாம்
உள்ளம் உடைந்துக்கக் கால். 10

---

1. ஒற்றி - எண்ணி. 2. கலம்-வளை. மேலும் என்பதில் உம்மை விகாரம். மேல் - மறுபிறப்பு. 3. வரல்நசைஇ - வருதலைவிரும்பி. 4. கோடுகொண்டேறலாகிய மரத்தின் தொழில் நெஞ்சின்மேலேற்றப்பட்டது. 8. வென்றீக - வெல்வானாக. அயர்கம் - அயர்வானாக 9. வைத்து - உயிர்தாங்கி. 19. உக்கக்கால் - திறந்துபட்டவழி.

128 குறிப்பறிவுறுத்தல்

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு. 1

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. 2

மணியுள் திகழ்தரும் நூல்போன் மடந்தை
அணியுள் திகழ்வதொன் றுண்டு. 3

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு. 4

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன் றுடைத்து. 5

பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து. 6

தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. 7

நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 8

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது. 9

பெண்ணினாற் பெண்மை உடைத்தென்ப கண்ணினாற்
காமநோய் சொல்லி இரவு. 10

---

1. கரப்பினும்-நாணான் அடக்கினும். 2. காம்பு எர் - மூங்கிலை யொத்த. 3. அணி-புணர்ச்சியானாய அழகு. 4. முகிழ்ப்பு - முதிர்ச்சியாற் புடைபடுதல். நகை-புணர்ச்சியின்பத்தான் நிகழ்வது. 5. கள்ளம்-மறைத்துப்போன குறிப்பு. 7. தண்ணந் துறைவன்-குளிர்ந்த துறையை யுடையவன். 9. செய்தது - செய்த குறிப்பு.

129 புணர்ச்சிவிதும்பல்

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. 1

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையுங்
காமம் நிறைய வரின். 2

பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணாது அமையல கண். 3

ஊடற்கண் சென்றேன்மற் றோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் னெஞ்சு. 4

எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. 5

காணுங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் தவறல் லவை. 6

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்தல் அறிந்தென் புலந்து. 7

இளித்தக்க இன்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. 8

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். 9

கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினுந் தான்விதுப் புற்று. 10

---

1. உள்ள - நினைந்ததுணையானே. 3. பெட்பவே-தான்விரும்பியவண்ணமே. 5. கோல் - எழுதுகோல். 6. தவறல்லவை - நீதி. 7. பொய்த்தல் - புரைபடுதல். உய்த்தலறிந்து - தம்மை ஈர்த்துக்கொண்டு போதலறிந்து. 8. இளித்தக்கஇன்னா - நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை, என்றிவை முதலாயின. 10. கண்ணிற்றுனித்தல் - சொன்னிகழ்ச்சியின்றி கண்சிவத்தல்.

130 நெஞ்சொடு புலத்தல்

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது. 1

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு. 2

கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். 3

இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 4

பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு. 5

தனியே யிருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு. 6

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு. 7

எள்ளின் இளிவாம்என் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 8

துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி. 9

தஞ்சந் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி. 10

---

1. எவன் - யாதுகாரணம். அவர்க்காதல் - அவர்கருதியதற்குடம்படுதல். 4. துவ்வாய் - நுகராக்கருதாய். காண், உரையசை. 5. அறாஅஇடும்பைத்து - நீங்காதஇடும்பையுடையது. 7. மாணா - ஒருநிலையினில்லாத. 8. உயிர்க்காதல் - உயிர்மேற்காதலையுடைய. 9. துணையல்வழி - துணையாகா வழி.

131 புலவி

புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கஞ் சிறிது. 1

உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 2

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 3

ஊடி யவரை யுணர்த்தாமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. 4

நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து. 5

துனியும் புலவியும் இல்லாயிற் காமம்
கனியுங் கருக்காயும் அற்று. 6

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று. 7

நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதலர் இல்லா வழி. 8

நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது. 9

ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவேம் என்ப தவா. 10

---

2. புலவி - ஊடல். 3. அலந்தாரை - துன்பமுற்றவரை. 4. வள்ளி - வள்ளிக்கொடி. 5. ஏர் - அழகு. 8. நோதலெவன் - நோகின்றதனாற் பயனென். 9. வீழுநர் - அன்புடையார். 10. உணங்கல் - மெலிதல்.

132 புலவி நுணுக்கம்

பெண்ணியலார் எல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 1

ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து. 2

கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. 3

யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 4

இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். 5

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். 6

வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. 7

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 8

தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. 9

நினைத்திருந்து நோக்கினுங் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. 10

---

1. பரத்தவென்பது ஆடூஉ முன்னிலை. 6. புல்லாள் புலத்தக்கனள் - புலலுதற் கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற் கமைந்தாள் 8. செறுப்ப - அடக்க. 9. இந்நீரர் ஆகுதிர் – பிறமகளிர்க்கும் இவ்வாறே பணிந்துணர்த்தும் நீர்மையுடையீர்

133 ஊடலுவகை

இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. 1

ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். 2

புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து. 3

புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை. 4

தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து. 5

உணலினும் உண்டது அறலினிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 6

ஊடலிற் றோற்றவர் வென்றார் அதுமன்னுங்
கூடலிற் காணப் படும். 7

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வியர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு. 8

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா. 9

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். 10

---

1. அளிக்குமாறு - தலையளிசெய்கின்றவாறு. 2. பாடு - பெருமை. 3. புலத்தலிற் புத்தேணாடுண்டோ - புலத்தலைப் போன்றின்பந் தருவதொரு சுவர்க்க முண்டோ. 5. அகறல் - நீங்கல். ஒன்றுடைத்து - ஓர் இன்பம் உடைத்து. 6. உண்டது அறல் - முன் உண்டது அறுதல்.

திருக்குறள் முற்றும்

உ

திருவள்ளுவமாலை

இறையனார்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். 1

உக்கிரப் பெருவழுதியார்

நான்மறையின் மொய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி. 2

பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து. 3

மாமூலனார்

அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளார் அறிவுடை யார்.

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென

எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி. 5

கோதமனார்

ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்—எட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று. 6

நத்தத்தனார்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னும் தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். 7

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்றொன் றூழ்—கூடுபொருள்
எள்ளில் எழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை. 8

வெள்ளி வீதியார்

செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியார் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியார் அல்லாதார் இல். 9

மதுரைத்தமிழ் நாயகனார்

எல்லாப் பொருளும் இதன்பா லுளவிதன்பால்
இல்லாத வெப்பொருளும் இல்லையால்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. 10